# சுந்தரி மாலை

பதிப்பு
சித்தி ஜீனத் நிஷா . ந

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
ஜூன் - 2008

# சுந்தரி மாலை

பதிப்பாளர்
**சித்தி ஜீனத் நிஷா. ந**

நெறியாளர்
முனைவர் **ய.மணிகண்டன்**

**தமிழ் இலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக்கழகம்**
**சென்னை - 600 005.**

**2008**

"சுவடியியலும் பதிப்பியலும்"
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

எண்: 53010712

# நெறியாளர் சான்றிதழ்

முனைவர் **ய.மணிகண்டன்**
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்று வரும் **"சுவடியியலும் பதிப்பியலும்"** பட்டயப்பேற்றிற்காக **'சுந்தரி மாலை'** என்னும் தலைப்பிலான சுவடியை **சித்தி ஜீனத் நிஷா. ந** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பு செய்தார் என்றும் இந்த ஆய்வேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்
(கையொப்பம்)
**(ய.மணிகண்டன்)**

நாள்: - - 2008
இடம்: சென்னை-5.

# பதிப்பாளர் உறுதிமொழி

**சித்தி ஜீனத் நிஷா. ந.,**
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

**சுவடியியலும் பதிப்பியலும்** என்னும் பட்டயப் பேற்றிற்காக சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறைக்கு அளிக்கப்பெறும் **'சுந்தரி மாலை'** என்னும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்,
சித்தி ஜீனத் நிஷா.
**(சித்தி ஜீனத் நிஷா.ந)**

நாள்: - - 2008
இடம்: சென்னை-5.

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | 11-16 |
| நன்றியுரை | 17 |
| சுந்தரிமாலை | 19-117 |

# பதிப்புரை

தமிழ் இலக்கியத்தில் நாயக்கர் காலத்தை, சிற்றிலக்கியக் காலம் என்று கூறுவர். இக்காலக்கட்டத்தில் தோன்றிய இலக்கிய வகைகளில் ஒன்றுதான் மாலை. இவை அந்தாதி,கோவையுடன் தொடர்புடையதாக கருதுவர். இவற்றில் "மாலை" என்பது அதிக பிரபலம் அடையவில்லை என்பது உண்மை. "மாலை" என்பதை "ஒரு பொருள் குறித்த பல கருத்துகளைப் பலவகைச் செய்யுளில் பாடுவது மாலை" எனக் கருத்துக் கூறுகின்றனர்.

மாலை, கோவை என்ற பெயரிலும் தொன்றுதொட்டுச் சிறு பிரபந்தங்கள் தோன்றி வளர்ந்து வந்துள்ளளன. இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை, மும்மணிமாலை, நான்மணிமாலை இணை மணிமாலை என்பன இத்தகையன, "மாலை" நூல்களில், காரைக்காலம்மையார் அருளிச் செய்த இரட்டை மணிமாலையே "காலத்தால் சாலப் பழமை வாய்ந்தது. இரட்டை மணிமாலை என்னும் இலக்கிய வகையின் வளர்ச்சி மும்மணிக்கோவை என்னும் இலக்கியத்தைத் தோற்றுவித்ததைப் போன்று மும்மணிக்கோவையின் வளர்ச்சி நான்மணிமாலை என்றும் இலக்கிய வகையைத் தோற்றுவித்தது என்பர். இவை சிற்றிலக்கியங்களின் வளர்ச்சியைக் காட்டுகின்றன.

**மாலை - நூல்கள்**

1. அங்கமாலை 2. அனுராகமாலை 3. இணை மணிமாலை 4. இரட்டை மணிமாலை 5. உழிஞைமாலை 6. உற்பவ மாலை 7. எண்மாலை 8. காஞ்சிமாலை 9. காப்புமாலை 10. கைக்கிளைமாலை 11. தாண்டகமாலை 12. தாரனகமாலை 13. தானைமாலை 14.தும்மைமாலை 15. நவமணிமாலை 16. நாமமாலை 17. நாண்மணிமாலை 18. நொச்சிமாலை 19. பல்சந்தமாலை 20. பன்மணிமாலை 21. புகழ்ச்சி மாலை 22. பெருமகிழ்ச்சி மாலை 23. மும்மணிமாலை 24. வசந்தமாலை 25. வருக்கி மாலை 26. வாகைமாலை 27. வீரவெட்சிமாலை 28. வேனில்மாலை

மேற்கூறிய நூல்கள் மாலை நூல்கள் ஆகும். அவற்றில் சிலவற்றை மட்டும் நாம் இங்கு காண்போம்.

**மாலை - இலக்கணம்**

தமிழில் உள்ள தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களில் 'மாலை' என்பதும் ஒன்று. அதன் ஒருவகை 'இரட்டை மணிமாலை.' இருவேறு மணிகளால் இடைப்பட்ட மாலை போன்று இருவேறு யாப்பு வகைகளைக் கொண்டு அமைவதால் இப்பெயர் பெற்றது. 'இருவேறுயாப்பு' என்பது பெரும்பாலும் 'வெண்பா கட்டளைக் கலித்துறை'யைக் குறிக்கும். 'இரட்டைமணிமாலை' க்குரிய இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல், வெண்பாப்பாட்டியல், நவநீதப்பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரம் பாட்டியல், இலக்கண

விளக்கம். தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை, சுவாமிநாதம் ஆகியன எடுத்துரைப்பதாக குறிப்பிடுவார்கள்.

## சதமணி மாலை

கி.பி. 17ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்திருந்த மேல் குறிப்பிட்ட தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் சதரத்ன சங்கிரகம் என்ற வடமொழித் திரட்டு நூலை வடமொழியிலிருந்து மொழிபெயர்த்து 'சதமணிமாலை' என்னும் பெயரால் வெளியிட்டுள்ளார். இந்நூலுக்கு 'ஞானதீட்சை' என்று மற்றொரு பெயரும் உண்டு

## தண்டக மாலை

தண்டகம் எனும் சொல் ஆபரணம், கரிக்குருவி, ஒரு வானம், குறிந்தளி,தொண்டை மண்டலம், துரை, வடமொழியினோர் செய்யுள் எனப் பல பொருள் தருவதாகும். இவ்விலக்கிய வகைக்கு முத்துவீரியம், பிரபந்த தீபிகை, பிரபந்த தீபம், தொன்னூல் விளக்கம் ஆகியன இலக்கணம் கூறுகின்றன.

*'வெண்பா வான்முந் நூறுவிரிப்பது*
*தண்டக மாலையாஞ் சாற்றுங் ஜாலே'*

- *முத்துவீரியம் : 1068*

*'...... வெண்பாமுந் நூறுகவிப்*
*பாடறண் டகமாலையாம்'*

- *பிரபந்த தீபிகை : 14*

*'தண்டக மாலையே தனி வெண்பாவான்*
*முன்னூறு செய்யுள் மொழிவது எண்*
*புணர்ச்சியே'*

*- பிரபந்த தீபம் - 41*

*தண்டகமாலை - வெண்பாவான் முந்நூறு*
*செய்யுட் கூறுவது இதுவே*
*புணர்ச்சிமாலை யெனவும் படும்*

*- தொ.வி. உரை - 203*

என வரும் முத்துவீரியம் உள்ளிட்ட மேற்காட்டிய பாட்டியலார் விளக்கங்களால் முந்நூறு வெண்பாக்களால் அமைவது இவ்விலக்கிய வகை என்பது மட்டுமே புலனாகிறது. தொன்னூல் விளக்கம், இவ்விலக்கிய வகைக்குப் புணர்ச்சிமாலை எனும் மற்றும் ஒரு பெயரைச் சுட்டுகிறது. பிரபந்த தீபமும் இவ்வகைக்குப் புணர்ச்சி மாலை எனும் பெயரும் உண்டென்பதைக் குறிப்பால் உணர்த்துகிறது.

**தாரகைமாலை**

தாரகை மாலை எனும் இலக்கிய வகையின் இலக்கணத்தைப் பழம்பெரும் பாட்டியல் நூலான பன்னிரு பாட்டியலும் விளக்கியுள்ளது. அந்நூல்

*"இரண்டு பொருள்புணர் இருபத் தெழுவகைச்*
*சீரிய பாட்டே தாரகை மாலை"*

*- பன்னிரு பாட்டியல் -193*

எனும் விதியான், 'இருபத்தேழு பாடல்களால் இரண்டு பொருள் புணர யாக்கப் பெறுவது தாரகை மாலை' என்று கூறுகிறது. பத்தினிப் பெண்டிரின் தெய்வத் தன்மையைப் புகழ்ந்து உரைக்கும் பாடற் பொருண்மை உடைய இலக்கிய வகை தாரகை மாலையாகும். இலக்கண விளக்கம் பாடு பொருண்மை மற்றும் யாப்பு வகை ஆகியனவற்றை மட்டுமே சுட்டுகிறது.

*"வகுப்பால் கற்புடை மகளிர்க்கு உள்ள*
*தகைத்திறம் கூறுதல் தாரகை மாலை"*
*- இலக்கண விளக்கம் - 867*

வெண்பாப் பாட்டியல் தாரகை மாலையின் பாடுபொருள், யாப்பு வகை ஆகியன குறித்துத் தெளிவுபடுத்துகிறது.

*"ஓதுசந்தத் தாலுரைத்தல் ஒண்தா ரகைமாலை*
*கோதிலாக் கற்பிற் குலமகளை - நீதிசேர்*
*மங்கல வள்ளை வகுப்பொடு வெண்பாவால்*
*இங்காமொன் பானென் றிசை"*

- வெண்பாப் பாட்டியல் - 54

**சுந்தரிமாலை**

அபிமன்யுவின் மனைவியான சுந்தரிக்கு நடக்கும் திருமணம் பற்றி கூறுகிறது இந்நூல். அர்ஜுனனின் மகனான அபிமன்யுக்கும், சுந்தரிக்கும் நடைபெறும் திருமணத்தை பற்றியும், அத்திருமணம் நடக்கும முன்

ஏற்படும் பல்வேறு தடங்கல்கள், போர்கள் பற்றியும் இந்நூல் மிகுதியாக பேசுகிறது.

இந்நூலின் இடையிடையில் நிறைய கிளைக் கதைகளும் வந்திருக்கிறது. அபிமன்யுவின் வீரச்சிறப்பு இதில் மிகுதியாகக் கூறப்பட்டிருக்கிறது. இது உரையாடலில் அமைந்த நூலாகும். இந்நூலில் பேச்சுமொழியும் இலக்கிய மொழியும் அதிகமான இடங்களில் கலந்து வருகிறது. சான்றாக,

*"தாயே நீ சொன்னபடி*
*சோதனையும் மெய்யாச்சு"*
*"பணத்தாசையால் மாயன்*
*பதையாமல் சம்மதிச்சு"*

இவ்வடிகளைச் சொல்லலாம். இதுபோன்று பல அடிகள் இந்நூல் முழுவதும் காணப்படுகிறது.

**மொழிநிலை**

வடமொழிச்சொற்களும் இந்நூலில் பல இடங்களில் பயின்று வருகிறது. (எ.கா) 1. ஸ்நானம், 2. பூஜை, 3. தோஷம், 4. வங்கிஷம், 5. முகூர்த்தம், 6. புருஷன், 7. புரோகிதர், 8. சோபனம் ஆகிய சொற்களை சான்றாகச் சொல்லலாம்.

இந்நூல் முற்றுப்பெறாமல் இருக்கிறது. முற்றுப்பெற இன்னும் இரண்டு, மூன்று ஏடுகள் இருந்திருக்கலாம் எனவும் சொல்லப்படுகிறது.

இந்நூலை படியெடுத்தவர் எம்.ஆர். சிவப்பிரகாசம் பிள்ளை

# நன்றியுரை

**"சுவடியியலும் பதிப்பியலும்"** என்ற பட்டயப் படிப்பினைப் பயில வாய்ப்பளித்ததோடு அத்துறை சார்ந்த ஆழ்ந்த அறிவினை நல்கிய தமிழ் இலக்கியத் துறைத்தலைவர் பேராசிரியர் **வீ. அரசு** ஐயா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியைப் படிப்பது முதல் பிழையின்றி அதனைப் பதிப்பித்தல் வரை அத்தனை நிலைகளிலும் ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் நல்கிய பேராசிரியர் **ய. மணிகண்டன்** ஐயா அவர்களுக்கும் என்நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இச்சுவடியைப் பதிப்பிக்க எனக்கு உதவிய என் **தோழிகளுக்கும், நண்பர்களுக்கும்** என் உளம் கனிந்த நன்றியைத் உரித்தாக்குகிறேன்.

இச்சுவடிப் படிப்பினை படிப்பதற்கு உதவிய என் **பெற்றோர்க்கும், குடும்பத்தினருக்கும்** என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

# சுந்தரி மாலை

முந்தி வினாயகனே முக்கணனார் தன் மகனே கந்தனுக்கு முன் பிறந்த கணபதியே முன்டைவாய் ஐவரிட பாரதத்தை அடவாக நான் பாட மெய்யான பஞ்சவர்கள் மேதினியிலே விளங்க வந்து வினைநீங்கி வல்வினையுந்தான் அகல சந்ததியும் இப்புவியில் தழைத்து மிக வாழ்க. கேட்டவர்கள் எல்லோரும் இளை கோத்திரம் வாழ்க மாயன்மகள் சுந்தரிக்கு மாலையிட நல்ப்பருவம். தூயத்தமிழ் நான் பாட துணை வருவாய் எந்தனுக்கு.

தாரா புகழுடைய தன்மரிட சீமை எல்லாம் சீராகவே ஆளும் திறமையுள்ள பஞ்சவர்கள் தன்மமாக புரியும் தாரணிகள் உள்ளதெல்லாம் நன்மையுடனே ஆளும் நலமான பஞ்சவர்கள் குருஷேத்திரம் பூமி கூடவே ஆண்டிருந்தார். திருத்தமுடன் இப்புவியில் திறமையுடன் ஆண்டிருந்தார். பரிவான் சந்திரகுலம் பாண்டவர்களை வருமே துரியோதனனும் துர்சனனும் தம்பியரும்

கர்னனுங் காங்கயனும் களத்ததோர் சொல்லியனும் மன்னன் துரியோதனனும் வன்மையுள்ள நூத்துவரும்

விதுவ மகாராசனுமே வேதம் புரோகிதரும் சதுரமுள்ள வேந்தர்களும் தன்மையுள்ள சேனைகளும் எல்லோரும் ராச்சியத்தை இயல்பாக ஆண்டிருக்க நல்லதொரு பஞ்சவர்கள் நகர்பாதி ஆண்டிருக்க துரியோதனன் பாவி தீங்கு நினைத்தான் காண். பரிவான சந்திரகுலப் பாண்டவரை ஓட்டிவிட்டு ஐவரையுந்தான் மிரட்டி அரசாள வேணுமென்று மெய்யே உள்ள பஞ்சவரை மிரட்டியே ஓட்டிவிட்டு.

சந்ததியும் இப்புவியை தானாள வேணுமென்று அந்தப்படிமனதில் அடவாகத் தானினைந்து ஓதி பொருதி தோற்கடிக்க வேணுமென்று வாது சொல்லியே மிரட்டி வகையாகவே ஓட்டி அந்தப்படிக்கு ஐவரையும் தோற்கடித்து விந்தையுடனே விவரமுடன் ஆண்டிருந்தான். ஐவர் வனவாசம் அடவாகப் போனபின்பு மெய்யுள்ள பஞ்சவர்கள் மேதினியை விட்டகன்று போன உடன் இப்புவியைப் புகழ்ச்சியாய் ஆண்டிருந்தான். காடுறைந்த பஞ்சவர்கள் காடுமலையே திரிந்தார்.

அந்தநல்ல வேளையிலே ஆனதொரு அந்தணர்க்கு சுந்தரம் சேர லக்குணர்கு சோபனங்கள் ஓட்டவேணும். மாயன்மகள் சுந்தரியை மாலையிட வேணுமென்று ஆயன்மகள் சுந்தரியை ஆனதொரு லக்குணர்க்கு பூரா கலைவேதியரை புத்தியுடனே அழைத்து துரோணாசாரியுள்ள

வரை துரிதமுடனே அழைத்து அந்த மொழிக்கேட்டு ஆசாரியாரும் வந்து விந்தையுள்ள ஆசாரி விவரமுடன் வந்தபின்பு துரோணாசாரியைப் பார்த்து துரிதமுடன் உரைப்பார். புராண வேதியருடனே பொங்கமுடனேய வைப்பான்.

லக்குண குமாரனுக்கு நல்முகூர்த்தம் பண்ணவேனும் இக்கணமே நல்முகூர்த்தம் இப்பவே பண்ணவேணும். மாயன் அரண்மனைக்கு வகையாக நீர்போய் ஆயன் அரண்மனைக்கு அன்புடன் நீர் போய் தாரா புகழ் படைத்து தருமருட தன்னுரிமை சீராகவே நன்றாய் திறமையுடன் நீக்கவென்று என்னுரிமை விட்டாலும் இது விடுவதில்லை என்று தன்மையுடன் பேசி சம்மதித்து வாருமென்று கலியாணம் பண்ணவேணும் கடுகெனவே போய்வாரும். கலியாணமே பண்ணவேணும். மன்னன் துரியோதனனும் நன்றாக இப்போது. நல்முகூர்த்தம் பண்ணவேனும் என்று மொழிபேசி இருக்கின்ற வேளையிலே துரியோதனனை துரோணரும் பார்த்து உரைப்பர்.

தீங்கில்லா அரண்மனைக்கு தீங்குவந்து நேர்ந்தது இப்போ. அச்சமில்லா அரண்மனைக்கு அச்சம் வந்து சூழ்ந்தது. காண் மாயன் சதிகாரன் மன்னவனே நம்பாதே. ஆயன் சதிகாரன் அரவக்கொடியோனே வாரதொரு

காரியத்தை வகையாக நான் உரைத்தேன். அந்த மொழிக்கேட்டு ஆன துரியோதனனும் துரோணாசாரி நீயும் இப்போ தோற்றாமல் சொல்லிவிட்டாய்.

வேறொருவர் ஆனாக்கால் மெத்த உண்டு காரியங்கள் நீயறியாமல் சொன்னதுக்கு அபராதம் வாங்கிவைப்பேன். அந்த மொழிகேட்டு ஆன துரோணாசாரியரும் தன்னுடன் அரண்மனைக்கு தான் எழுந்து போனபின்பு துரியோதனன் உடைய சேனை மன்னர் தங்கியும் கர்ணனும் காங்கயனும் கனத்ததொரு சல்லியனும் மாமன் சகுனி மற்றும் உள்ள மன்னவரும் கொன்ற மாலை தேசத்தரசன் கொடி மன்னர் தங்கியும் படைத்தலைவர் மன்னவர்கள் பாங்காகக் கூட்டமிட்டு சங்கு துவாரகாபுரிக்கு தான் பயணம் போகவேணும்.

ஆகாத பயணமென்றால் அரவக்கொடியேனும் அதுவே பயணமென்றான் ஆனதொரு மன்னவனும் கர்ணன் சகுனி காங்கயனும் பயணமென்றான் பயணச் செலவுக்கு பத்து லட்சம் பொன்னெடுத்து மாயனுட தேவிக்கு வண்ணக் கம்பிபட்டு ஒன்று மாயன்மகள் சுந்தரிக்கு வண்ணக்கம்பி பட்டு ஒன்று இத்தனையும் தான் வாங்கி எல்லோரும் பயணமென்றான். ஆனை படைசேனை அரசர் மக்கள் படையெடுத்தார். குதிரைப்படை சேனை கொடிமன்னர் படையெடுத்தார். கர்ணன் சகுனி காங்கயனும் படையெடுத்தார்.

அஸ்தினாபுரங் கடந்து ஆனகுந்திதான் கடந்து அரிண்ட வனங்கடந்து அயிராவதம் கடந்து ஊசி வனங்கடந்து உருத்திராட்ச பூமிவிட்டு சிள்ளென்னுங் காடும் செடியும் வனாந்திரமும் மூங்கில் வனங்கடந்து முன்னூற்றுக் காதவழி சங்குதுவாரகாபுரிக்கு தானாக வந்து இறங்கி இறங்கியே மன்னவர்கள் இன்பமுடன் தூதுவிட்டார். தூதுவனும் ஓடி வந்து துவாரகாபுரி புகுந்து மாயனையுங் கண்டு வகையாக தெண்டனிட்டான். தெண்டனிட்ட தூதுவனை சேதியென்ன சொல்லு மென்றார்.

கர்ணன் சகுனி காங்கயனும் வந்திறங்கி அரண்மனைக் வாரமென்று அடியேனை அனுப்பி வைத்தார். இம்மட்டுச் சேதியென்று இன்பமுடன் தெண்டனிட்டான். அப்போது மாயவனும் அடவாக சேதி சொன்னால் வந்தவர்கள் அத்தனையும் வரச்சொல்லிச் சொல்லும் என்றால் தூதுவனும் ஓடி வந்து தோற்றமுள்ள கர்ணர் முன்னே வரச்சொல்லிச் சொன்னார்கள். மாயன் பெருமாளும் கர்ணனும் காங்கயனும் கனத்ததோர் சகுனியுமாய் மூவருங்கூடி முகூர்த்தமாய்த் தான் அடைந்தார். மாயன் அரண்மனைக்கு வந்து கண்டார் மாயவனா.

வந்த உறவுமுறையை வாருமென்று தான் கேட்டு முந்தித் தவனத்துக்கு மோர் தண்ணீர்தான் கொடுத்து

எங்கே வந்திரென்று சொல்லி இன்பமுடன் கேட்கலுற்றார். அப்போது காயங்கனும் அடவாகத் தானுரைத்தார். உத்த உரிமை, உரிமைப் பெண் கேட்க வந்தோம். லக்குணகுமாரனுக்கு நாவிட வந்தோம் அய்யா. கலியாண கோபனங்கள் கடுகெனவே பண்ண வேணும். நல்லதென்று சொல்லி நகைத்தாரே. மாயவரும் நீர் மொண்டாத்தரனு மென்ன அவன் கொண்டால் தரனுமென்ன எப்பவென்று நானிருந்தேன். இனிக்கேளும் என் வார்த்தை.

துரியோதனன் உறவு தேடக் கிடையாது. உரிமைக்கு ஆனாக்கால் ஒன்பது லட்சம் பொன்னும் உண்டு. அசலுக்கு ஆனாக்கால் ஐம்பது லட்சம் பொன்னும் உண்டு. நீங்கள் என்ன ஈடு நிறைவேற்றப் போறீர்காண். நம்மிட கோபாலர் பெட்டியிலே ஒரு பெட்டி பணம் கொடுத்து விடு. ஒரு பெட்டி பணமானால் உலகத்துக்கு ஏற்காது. நாலுபெட்டி பணமானால் உலகத்துக்கு ஏற்காது. நாலுபெட்டி பணமானால் நாங்கள் கொடுக்கிறோம் காண். அப்போது மாயவரும் அடவாகத் தான் உரைப்பார். வீண் பேச்சுப் பேசாதே. வீரியங்கள் சொல்லாதே. ஒருபெட்டி பணம்தானே உள்ளபடி சம்மதியும்.

அந்தப்படிக்கு அடவாகச் சம்மதித்தார். ஆயாத்திப் பாறையிலே அளந்துவிடச் சம்மதித்தார். கர்ணன் சகுனி

காங்கயனும் தான் அடைந்தார். துவாரகாபுரி விட்டு துருசாய் நடந்தார்கள். அர்ச்சுனர் புரம் இருந்து ஆன குந்தி தரனும் வந்து குருசேத்திரம் பூமியிலே கூடாரம் வந்து இறங்கி துரியோதனனும் திறமாய்க் கொலு இருந்தான். காயோ பழமோ கர்ணா நீ சொல்லு மென்றான். காய்க்கு மிகப் போனவனும் கனி பழமே கொண்டு வந்தேன். ஆகாசம் முட்டும் ஐம்பது களஞ்சியமாம்.

வானத்தை முட்டும் வண்ணக் களஞ்சியமாம் ஆயிரங்களஞ்சியத்தை அடவாகத் தானெடுத்து யானையிலே ஆயிரமாம், குதிரையிலே பதினாயிரமாம், ஒட்டகையில் ஆயிரமாம், ஒருகோடி பொன்னெழுத்து ஆலாத்திப்பானா அவர்கள் திசை நோக்கி வந்தார். போற இடத்திலே புதுச்சங்கம் உண்டு பண்ணி ஆயமுன் தீர்ந்து ஆலாத்திப்பாறையிலே கொண்டு வந்து குவித்தார்கள். கொல்லிமலை போலே காற்றிலே தூற்றி கடப்பாளை தானுந்தள்ளி முன்னாகப் பாதி தள்ளி பின்னாகப் பாதி தள்ளி.

நடுராசியாக நல்லதாக தாம் அளந்தார். அப்பளம் பெட்டி அரைப்பெட்டி ஆனதுவே மறுபடி ஓடிவந்து வன்னலட்சம் களஞ்சியமும் திரும்பி எடுத்தார்கள். தென்னவர்க்கு உள்ளதெல்லாம் கொண்டு வந்து

போட்டார்கள். கோபாலப் பெட்டியிலே அப்பவும் முக்கால்பெட்டி அடவாக நிரம்பியதே. திரும்பி மிக வந்து துரியோதனன் உடைமையெல்லாம் வகையாக வாங்கி வந்தார்கள். உடைமையெல்லாம் கொண்டு வந்து போட்டு குறைப்பெட்டி நிரம்பி விட்டார். ஆயனுடபெட்டி அடவாக நிரம்பியதே.

பெட்டியெடுத்துப் போகையிலே சொன்னாராம். இன்னமொரு சோதி சொல்லமறந்தேன் காண். இனிமேல் கலியாணம் தாமதங்கள் பண்ணாதே. கலியாண வாசலிலே கலக்கம் வந்துதென்று சொல்லாதே. சேராத சத்தராதி சேனைபடை வந்தாலும் தேவேந்திரன் மகனார் சித்திரசேனை வந்தாலும் யாராரும் வந்தாலும் அஞ்சேனே மாயவனே தாரு புகழுடைய தருமருட கூட்டம் வந்தால் எதிர்க்கப் பயப்படுவேன். அடவாகச் சொல்லி விட்டேன். அந்தப்படி சொன்னதுக்கு ஆன துரியோதனனும்.

தருமருட கூட்டம் சண்டைக்கு வந்தாக்கால் என் கையிலே ஆனால் எங்கள் பெண் சுந்தரியாள். அவன் கையிலே. ஆனால் அவர்கள் பெண் சுந்தரியாள் அதுக்கு வேறெண்ணாதே. ஆனதொரு மாயவரே பெட்டி யெடுத்துப் புறப்பட்டார். மாயவரும் பெட்டியைக் கொண்டு வந்து பொக்கிஷத்தைத் தான்திறந்து

இராமனென்று சொல்லும் நானூறு களஞ்சியமாம் அனுமந்தனென்று சொல்லும் ஆயிரம் களஞ்சியமாம் ஆயிரங்களஞ்சியத்தை அட்டவாக நிரப்பி விட்டார். ஆயிரம் விளக்கு அறியாமல் தான் எரிய இந்தப்படியாக இருக்கிற வேளையிலே ஐவர் வனவாசம் அடவாகப் போகையிலே மாயன் மகள் சுந்தரிக்கு மஞ்சள் கொடுத்துவரக் கேட்ட செலவு கிளிமொழியாள் சுந்தரிக்கு கொடும் என்று பஞ்சவர்கள் கூறினார்.செட்டியார்க்கு அந்தப்படி செட்டி அடவாக கொடுத்து வந்தான். மஞ்சள் நல்ல காணியென்று வரிசையே தாரோம் என்றால் அந்தப்படிசொல்லி அடவான சுந்தரியை வாள்வீமன் தேவி என்று காட்டில் வந்தார் அப்போது அந்தப்படியாக அடவாய் இருக்கையிலே.

லக்குண குமாரனுக்கு கொடுக்கிறோம் என்று சொல்லி பணம் வாங்கிப் போனதை பார்த்திருந்தான். செட்டியாரும் மஞ்சள் மிக வாங்க வந்தார்கள். தாதியரும் வந்த தாதியருடனே வர்த்தகனும் சொல்லுகிறான். மஞ்சள் கொடுப்பதில்லை மணவாளன் வேறாச்சு. செலவு கொடுப்பதில்லை. தேன்மொழியாள் சுந்தரிக்கு மணவாளன் வேறாச்சு. வன்மையுள்ள தாதியரே என்று தான் செட்டியாரும் ஏற்கனவே சொல்லிவிட்டான். அந்த மொழிகேட்டு ஆனதொரு தாதியர்கள் மாயன் மகள் சுந்தரியை வகையுடனே வந்து கண்டு.

கேளாத அதிசயத்தை கேட்டு வந்தேன் என் தாயே. பணத்தாசையால் மாயன் பதையாமல் சம்மதிச்சு மாயன் அனுப்பிய சொல் வன்மையுடன் எங்களுக்கு செட்டியார் இவ்வாறு இவ்வார்த்தை தேன்மொழியே சொல்லல் உற்றான். செட்டியாரும் இயல்பாகச் சொல்லி விட்டான். அதுகண்டு ஓடிவந்து ஆத்தாளே சுந்தரியே தாதியர்கள் சொன்ன மொழிதான் கேட்டு சுந்தரியாள். நீல விழிக்கண்கள் ரெண்டும் நெருப்புத் தனலாகிறது.

தின்னுமிஞ்சினது அம்பலங்கள் தீக்கலந்து வேகிறது. கோபித்து எழுந்திருந்தாள் கொம்பனையாள் அப்போது சிங்க முதப்பல்லக்கு சேரவே ஏறிக்கொண்டு மாயன்மகள் சுந்தரிக்கு மனதிலேறிப் பறந்து மாயன் அரண்மனைக்கு வாராளே சுந்தரியாள் மகள் வார சேதிதனை மாயவரும் தானறிந்து நீட்டினார். காலை நெடுகவிட்டார். முக்காட்டை கண்டாளே சுந்தரியாள் கண்கள் பொரி பறக்க ஆயன்மகள் சுந்தரியாள் அய்யர் அண்டை வந்திருப்பது மாயன் பெருமாளே மன்னவனே சித்திரையோ.

ஆயன் பெருமாளே எங்கள் அய்யாவே நித்திரையோ மலங்காடு தன்னில் மாடு மேய்த்த புத்தியோ அலங்காடு தன்னில் ஆடு மேய்த்த புத்தியோ வெண்ணெய் திருடி வெட்கங்கெட்ட புத்திரியா கட்டுண்ட

புத்தியினால் கண் உறக்கமாச் சோதரன் விருசாய் எழுந்திரய்யா. மேகவர்ண மேனியனே அந்தமொழிக் கேட்டு ஆயனே எழுந்திருந்து ஆயனையும் போற்றி அடி வணங்கித் தெண்டனிட்டு பொன்னான மேனி புழுதிபடக் காரியமென்ன.

தங்கத்திருமேனி தரையில் விழ நியாயமென்ன வந்ததொரு காரியத்தை வகையாகச் சொல்லுமய்யா. கேளாத அதிசயத்தை கேட்டு வந்தேன். எங்கள் அய்யா அது கண்டு அரண்மனைக்கு அடவாக வந்தேன் ஐயா வந்ததே போதும் எங்கள் மாணிக்க மாமயிலே மான் ஈன்ற கண்ணே வரிசையுள்ள நல்கிளியே தேனே என் கண்மணியே தெவிட்டாத திரவியமே உன்னைக் கொடுக்கும் இடம் பார்த்துக் குடியைப் பதித்தனம்மா... சேருமிடம் பார்த்துத் தென்னைப் பதித்தனம்மா. வாழுமிடம் பார்த்து வாழைப் பதித்தனம்மா.

பழமே நழுவிப் பாலில் விழுந்தாப் போல தின்ன நல்ல சோறுமுண்டு. செலவழிக்க ரொக்கம் உண்டு. உண்ண நல்ல பாக்குமுண்டு. உடுக்கத்துயிலும் உண்டு. வனம்போன பாண்டவர்கள் வாரதில்லை விட்டுவிடு அப்படிச் சொல்ல அதிக கோபம் உண்டாகி என்ன மதியினாலே எண்ணிக் கொண்டாய். கலியாணம். ஆடுமேய்த்த புத்தி அறிவு கெட்டுப் போனாயோ. மாடு

மேய்த்த புத்தியாலே மதிகெட்டுப் போனாயோ. பணமே படைத்தார்க்குப் பாங்காய்ப் பெண் கொடுப்பாயோ பத்தால் பறையன் பணமே படைக்கிலையோ.

சக்கிலியன் தானும் தனத்தைப் படைக்கிலையோ பறையன் பணங்கொடுத்தால் பறையனுக்குப் பெண் கொடுப்பாய். பணமே படைத்தால் பாழ்ங்கிணத்தில் போடானோ. என்னைக் கொள்ள வந்தவனை இளமார் பிளந்தெறிவேன். என்னைக் கொல்ல வந்தவனை ஈரல் பிடுங்கியெறிவேன். உன்னுடைய புத்தி ஒழிந்துதான் போனாலும் கொள்ளுகிற வன்புத்தி குறைந்து தான் போனதென்ன. அத்தை மகன் இருக்க மற்றொருவன் வாரதென்ன ஒருத்தன் பெண்ணுக்கு ஒருத்தன் ஆசைப்பட்ட கதை கேளும்.

ஒரு பட்டணத்து நாகர் பள்ளிக்கூடம் போடாவென்று வாத்தியார் தன்னை வகையாகத் தான் அழைத்து ராச குமாரத்தி கொண்டு பிள்ளைகளைப் படிக்கவைத்தான். பள்ளிக்கூடம் போய்ப்படிக்கிற நாளையிலே படியாத வித்தையெல்லாம் படித்தது பிள்ளை ரெண்டும் ராசாவும் பார்த்து நன்மையுடன் சொல்லல் உற்றான். இனிமேல் பள்ளிக்கூடம் போகவே வேண்டாம் அம்மா. படிப்பித்த வாத்தியார்க்கு பத்துப்பொன் கொண்டு போய் கொடுத்து அந்தப்படி தானே அந்த பிள்ளைரெண்டும் ஓடி வந்து.

பத்துப் பொன் தானும் பாதத்தில் வைத்த பின்பு போறோம் என்று சொல்லி பிள்ளைகள் அப்போது வாத்தியார் தானும் வகையாக அப்போது பள்ளிப் பசங்களையும் பரு மணலுக்குப் போகவிட்டு இளைய பிள்ளையைப் பார்த்து இளவெந்நீர் கொண்டு வா போவென்று தான் அனுப்பின் மதி ஒன்றே நினைத்து மூத்த பிள்ளை தன்னை போகாதே என்று சொல்லி, ராசகுமாரத்தி பெண்மயிலே, பெண்கள் சுடாமணியே, குயிலே, மரகதமே, கோமளமே, நற்கிளியே.

பேடை மயிலே எனக்குப் பொங்கி இட வேணுமடி. பூங்காவனத்தில் பொங்கியட வேணுமடி. வெந்நீர் வைத்து விடைதீரும் வாருமென்றார் என்று மொழிகேட்டு ராசகன்னி ஏது சொல்வாள். அய்யாவே இப்ப அது வார்த்தை சொல்லாதே, ஓதி வைத்த வாத்தியார் ஒருக்காலும் என் தகப்பன் படிப்பித்த வாத்தியார் பார்த்துத்தாம் என் தகப்பன் ஆதிகுருவே அய்யாநீர் தீண்டாதே கைச்சாசம் பண்ணாதே. கர்த்தாவே என் தகப்பனே என்று தான் சொல்லியிருக்கிற வேளையிலே.

பள்ளிப்பசங்கள் பருமணல் கொண்டு வந்தார். வெந்நீர்க்குப் போன மெல்லியரும் வந்துவிட்டாள். வந்ததைக் கண்டு வாத்தியார் அடக்கி விட்டான். பிள்ளைகள் இரண்டும் பேசாமல்போனதுவே வந்தனன்

ராத்திரியே மூத்தப்பிள்ளை ருது வாச்சு. பஞ்சாங்கப் புரோகிதரைப் பாங்குடனே ஏது சொல்வான். ஓதி வைத்த வாத்தியை ஒரு நொடியே கூட்டி வந்தால் காரியங்கள் எல்லாம் கண்டறிந்து சொல்லுவான். அந்தப்படிக்கு ஆளுமிக ஓடிவந்து.

வாத்தியாரைக்கண்டு வகையாக அழைத்து வந்தார். ராசாவைக் கண்டு நலமுடனே தெண்ட னிட்டான். வாத்தியார் தன்னை அழைத்து வகையாகப் பாரும் என்றான். நல்லதென்று சொல்லி நலமாகத்தான் பார்த்து ருதுவான வேளை பட்சம் நல்லதாய்த் தானிருக்க ஆண்டவனே ராசாவே அடியேன் நான் சொல்லுகிறேன். அம்மாளிருந்தால் நம்மிட அரண்மனைக்கு ஆகாது. ருதுவான வேளைபட்சம் பொல்லாதாய், இருக்குதய்யா என்று தான் வாத்தி எடுத்து மிக உரைத்தான். அந்தப்பாவம் தீர அடவாகச் சொல்லும் என்றார்.

பொன் பேழைக் கொண்டு பேழையிலே தானும் வைத்து ஓடுகிற பேருந்தில் ஒரு நொடியில் தள்ளும் என்றான். அந்தபடிக்கு அடவான பேழையிலே பெண்ணையும் வைத்து பேருந்தில் தள்ளி விட்டான். ஆத்தோடே தானும் அருந்தியும் போகையிலே அத்தை மகனிருக்க மகளே ஆத்தோடே போறாயோ அழுது புலம்பி ஆத்தோடே விட்டார்கள். வாத்தியார் தானும்

வகையாக ஓடிவந்து புனலி ஆற்றங்கரையோரம் போயிருந்தார். வாத்தியாரும் வழியை மிகப்பார்த்து தானிருந்தான்.

அந்த நல்ல வேளையிலே அவள் அத்தைமகன் வேட்டைபோய் வேட்டையும் சிக்காமல் வேங்கைப் பிடித்து வந்தான். புனலி ஆற்றங்கரையோரம் வந்தே இருந்தார்கள். அந்த நல்ல வேளையிலே பேழை ஆத்தோட வந்ததய்யா. பேழையும் உங்களது பேழைக்கு உள்ளே இருக்கிறது. என்னது நல்லதென்று சொல்லி நாலுப்பேர் பிடித்து வந்து கொண்டு வந்து வைத்தார்கள். குருப்பரன் மன்னவனும் பேழை தனை அவிழ்த்தார் என்று சொல்லி ஓடுகிற தண்ணீரிலே உள்ளே தள்ளி விட்டார்கள். அப்பவே ராசாவும் அடவாகத்தான் பார்த்து நல்ல பெண்ணாய் இருக்கிறது நமக்கு ஆகுமென்று சொல்லி பேழை நின்ற நிறைக்கு பொன்னுமே தான் கொடுத்து வெறும் பேழை ஆகாதென்று வேங்கைதனை அடைத்து ஓடுகிற பேருந்தில் உள்ளாகத்தள்ளி விட்டான். வாத்தியார் கண்டு வகையாகத் தான் பிடித்து எட்டிப் பிடித்து எடுத்து வந்தான். வாத்தி அவன் எடுத்து வந்த பேழைதனை இறக்கியே வீட்டில் வைத்து,

பள்ளிப்பசங்களைப் பக்கமே தான் அழைத்து சோபன கலியாணம் துருசாய் முடிக்க வேணும். தலைவாசல் சாத்தித் தப்பாமல் நீங்களும்தான் ராமசெயம் ராமசெயமென்னுங் கொள் என்று சொல்லிப் போட்டு இயல்புடனே வாத்தியாரும் வீட்டுக்கு உள்ளே புகுந்து மெத்த மமைகிழ்ந்து பேழைக்கிட்டே வந்து பேடை மயிலென்று சொல்லி பூங்காவனத்தில் பொங்கியிடச் சொன்னேனே. அப்ப நீ மாட்டமென்றால் அகப்பட்டுக் கொண்டாயே. கலியாண சோபனங்கள் கடுகெனவே பண்ண வேணும்.

கட்டை அவிழ்த்துவிட்டான் கட்டழகன் பொட்ட வாத்தி கட்டை அவிழ்த்த பின்பு கண்டானே வேங்கைதனை பெண்ணென நானிருந்தேன். பெருவேங்கை யானதுவே பேழையை விட்டு பெருவேங்கை தான் குதித்து இட்டுது வேங்கை வாத்தி இரு துண்டாய் விழுந்தான் வேங்கை தானப்போ வெளிப்பட்டுப் போனதுவே வேங்கையோடு ஒக்கும் எங்கள் அத்தை மகன் மச்சினனும் வாத்தியாரோடு ஒக்கும் என்னைக் கொள்ள வந்த லக்குணனும் மாய என் பெருமாளே மன்னவனே கேளுமின்மை கத்தாழை மேலே கல்லுவண்டி வந்தாலே.

கல்லு வண்டிக்குச் சேதமோ கத்தாழைக்குச் சேதமோ கல்லு வண்டியோடு ஒக்கும் அத்தை மகன்

மச்சினனும் கத்தாழையோடு ஒக்கும் அந்த காந்தாரி மெற்ற பிள்ளை கொக்குத்திரளியிலே ராசாளி புகுந்தாக்கால் கொக்குக்குச் சேதமோ ராசாளிக்குச் சேதமோ ராசாளியோடு ஒக்கும் நல்லத்தை தன்மகனும் அவருடைய பலமும் அறிந்து மிகக் கண்டிருந்து இப்படி தானும் ஏழைமதி போவாயே. நாளைக் கலியாணம் நன்முகூர்த்தம் கண்டாய் ஐயா என்று சொல்லி சுந்தரியாள் ஏறினாள் பல்லக்கு.

தாயார் மனைதேடி தங்க நல்லாள் ஓடி வந்து மகள் வராது கண்டு வர்ணக் கதவடைத்தாள். மாயன் மகள் சுந்தரியாள் வகையாகத்தான் பார்த்து தாயே உன் மாங்கலியம் இங்கிலியம் ஆகாதோ என்று சொல்லி சுந்தரியாள் ஏறினாள். பல்லக்கு அட்சணமே தான் அரண்மனைக்கு வந்துவிட்டாள். அரண்மனைக்கு வந்து அடவாக இப்போது தலையை விரித்து அழுதாள். தங்க நல்ல சுந்தரியாள் முத்தான கண்ணீர் முலை மார்பில் சோர விட்டாள். பவளம் போல் கண்ணீரைப் பக்கமே சேர விட்டாள்.

தங்கம் போல் கண்ணீரைத் தரையிலே சோரவிட்டாள். நான் பெண்ணாய்ப் பிறந்ததை மண்ணாய்ப் பிறந்தாலும், மண்ணாய் பிறந்தாலும் ஒரு மரமாய் முளைத்தாலும், மரமாய்ப் பிறந்தாலும்,

வகையாய் வளர்ந்தாலும் நல்லமரமென்று நாலுபேர் தான் பார்த்து அடிமரமும் அச்சாகும் மேல்மரமும் பொம்மையாகும். சித்திரைத் தேருக்குச் செல்வத்தேர் ஆகும் அய்யா வைகாசித் தேருக்கு வசந்த தேராகும் அய்யா. இரதத்தின்மேல் சுவாமி நன்றாக வந்தாலும், நாட்டிலே உள்ள நல்லோர் பெரியோர்கள்.

எல்லோருங் கைமுடிந்து இருப்பாரே வையகத்தில் அந்தப்படி புண்ணியம் அடவாகச் செய்தேனோ. பெண்ணாய்ப் பிறந்து பேய்க் கோலமானேனே பத்தினியாள் புலம்புகிறது. பஞ்சவர்க்கு கேட்கிலயோ. உத்தமியாள் புலம்புகிறது. ஒருவருக்கும் கேட்கிலயோ. அத்தைமகன் மச்சினர்க்கு ஒரு ஆளுமிங்கத் தானேனே. வைகைக் கரையோரம் வாயுராசா வந்திருந்தான். செப்பூசி கொண்டு செவியிலிடித்தால்ப் போல ஆரடா புலம்புகிற வளென்னு அடவாக ஓடி வந்தான்.

பார்ப்பான் வடிவு கொண்டு பஞ்சாங்கம் கையில் பிடித்து பத்தினியாள் அரண்மனைக்கு பக்கம் எதிராக வந்தான். கண்டாளே தாதியரும் தரும் பார்ப்பான் வாரதையும் எந்த ஊரய்யா எங்கே வந்தாய். இப்போது மாயன்மகள் சுந்தரிக்கு வரிசைக் கவியாணமென்று கட்டழகி சுந்தரிக்கு அந்த சத்தம் அடவாகக் கேட்டதப்போ நின்றால் குத்தும் விழுந்தால் உதையுமாய்

அந்தப்படியாக அடித்து முடித்துப் போகையிலே பேத்தி என்று விளையாடினேன். பின் குடுமி விட்டுவிடும்.

அந்த நல்ல சேதி சுந்தரிக்கு அடவாக வந்து சொன்னால் கொம்பனையாள் சுந்தரியும் கூட்டி வரச் சொன்னாளே கூட்டி வந்து விட்டார்கள். கொம்பனைக்கு முன்னாக நான் தாண்டி வாயுராசா நல்லதொரு பெண்மயிலே அழுகிற சத்தம் எந்தனுக்குக் கேட்டதடி அதுகண்டு வந்தேன். ஆனதொரு சுந்தரியே வாயு ராசாவைக் கண்டு வகையாகத் தென்டனிட்டு பாட்டா நீ இப்போ பயணமே போகவேணும்.

அத்தை மகனுக்கு ஆள் ஓலைக்கொண்டு போகவேணும். நுல்லதென்று வாயுராசா நலமாகச் சொன்னானாம். நல்லது என்று சொல்லி நானூற்றுக்கலம் அரிசி போட்டு மிக வேகிறது. புகழ்பெரிய அரண்மனையில் சோறு மிகக் கட்ட துயில் வேணும் என்றார்கள். அப்பவே வாயுராசா அடவாய் எழுந்திருந்து நின்று தானப்போ நெடுந்தூரம் பார்க்கையிலே துரியோதரன் பெருமாள் தென்னவனும் அப்போது பெண் கொள்ள வாரமென்று பெரிய கூடாரம் போட்டார்கள். துரியோதனன் கூடாரம் திக்கெங்கும் தான் பார்த்து.

சேரவே சுழற்றிவிட்டாள் தெய்வலோகம் போய்ச் சேரும். தெய்வலோகம் போய் விழுந்து சேரவே கொண்டு

வந்து வந்து மிகக் கூடாரம் வகையாகவே பொறுத்தி கூட்டுச்சோறு கட்டினான். கருமலைக்கு ஒப்பாக ஓலையெழுதும் அம்மா ஒரு நொடியில் போகவேணும் நல்லதென்று சுந்தரியாள் நல் ஓலை தான் எடுத்து வாரி எடுத்தாளே வடிவான சுந்தரியாள் அஞ்சு பேர் தானெடுத்து ஆண்டவரைத் தான் நினைந்து மாதமும் குத்தி வைத்து வகையாய் எழுதுகிறாள். அத்தை மகன் மைத்துனர்க்கு அடவாகத் தெண்டணிட்டேன்.

தெண்டனிட்ட சுந்தரிக்கு ஒரு சேதங்கள் வாராமல் துரியோதனன் பாவியொரு தீங்கு வினை நினைந்து வனம் போன பாண்டவர்கள் மாண்டார்கள் என்று எசால்வி வேசி மகன் லக்குணர்க்கு மாயன் பெண் கொடுக்க சம்மதித்து பங்குனி மாதம் பதினைந்தாம் தேதியிலே வெள்ளிக்கிழமை விசயதசமியிலே கலியாணம் கடுகவே முடிக்கக் கடுகவே வாரான் காண். ஓலைக்கண்ட நாழிகையில் அங்கே ஒரு நொடியில் நில்லாதே. ஆளும் வந்து சொன்னால் அரை நாழிகையில் நில்லாதே இரண்டு ஓடு தானெடுத்து நன்றாகத் தானினைந்து.

எப்போதும் போலே இருக்கிற பெண்ணல்ல காண் ஈனாத வாழை இளவாழைக் கன்றதுபோல் காயாத வாழைக் கனிவாழைக் கன்றது போல கையிரண்டும் கால் இரண்டும் வாள் உருவி விட்டாப் போல்

பல்லுத்திருவழகும் பார்வதிக்கு ஒப்பிடலாம். நெற்றித் திருவழகு நிலாப்பிறைக்கு ஒப்பிடலாம். போடையில் சுந்தரியாள் புத்தியாய் நான் வளர்ந்தேன். கண்ணு விழிகள் ரெண்டும் களச்சிக்காய் நெத்தது போல் மார்புத் திருவழகு வர்ணம் பதித்தாப்போல் மூக்குத் திருவழகு முத்துப் பதித்தாப்போல்.

கையழகும் காலழகும் கண்டதில்லை, ராச்சியத்தில் முன்னழகும், பின்னழகும் முத்துப்பதித்தாற் போல் ஓலைக் கண்ட நாழிகைக்கு ஒரு நொடியில் வரவேணும். மூன்று ஓடு எடுதது முகூர்த்தமாய் எழுதுகிறாள். என்னவென்று சொல்லி எழுதினாள். சுந்தரியாள் உங்களுடையதா யாரும் எங்களுடதா யாரும் முக்காலும் பிள்ளையில்லை மூன்று தரம் பிள்ளையில்லை பிள்ளையில்லையென்று பெருமாளும் ஓடி வந்து சித்திரா புத்திரரை சேரவே கேட்டபின்பு முக்காலும் பிள்ளையில்லை மூன்று தரம் பிள்ளையில்லை.

என்றுதான் சொன்னதுக்கு இயல்பான மாதவரும பரமேசுவரன் இட்ட பக்கமே ஓடி வந்து அப்போது ஈசுவரரும் அடவாக ஓடிவந்து மாயன் பெருமாளே வந்ததே சேர சொல்லுமென்றார். பிள்ளையும் இல்லாத பெருந்தவசு கேட்க வந்தேன். மைந்தனும் இல்லாத மனக் கவலை கேட்க வந்தேன். பிள்ளைவரம் கேட்காதே

பேசாமல் போங்காணும். அது ஓடாதென்று கேட்டாராம். ஆயன் பெருமாளும் அப்போது ஈசுவரரும் அடவாகச் சொன்னாராம். உன் தங்கையருந் தேவியரும் தனித்து வழி போகையிலே.

நல்லாற்றங்கரையோரம் நந்தவனம் போட்டிருக்கும் பண்டாரத்தை அழைத்து நந்தவனம் பார்க்கப் போனதென்ன பண்டாரம் தான் இருந்து லட்சுமியைப் பார்த்து மிக உரைப்பான். கொடுப்பாரும் இல்லாமல் நந்தவனம் குறை வந்துப் போச்சுதம்மா. அஞ்சுபொன் கையில் கொடுத்து அடவாய் அடையுமென்றாள். அந்தப்படிக்கு அடைச்சானாம். பண்டாரம் சிங்காரப் பூந்தோட்டம் சிறப்பாய் வளர்ந்தது. அப்போ அந்த நல்ல தோட்டத்தை ஐயன் பசு அழித்ததுகாண். தோட்டம் மிகப் பார்க்க சுபத்திரையும் லட்சுமியும் வந்து மிகப் பார்த்து வகையாக ஏது சொன்னாள்.

தோட்டங்கள் எல்லாம் சுத்தி அழித்ததென்ன ஆத்தாளே தாயே அது கேட்டாயோ இல்லையோ பார்ப்பான் பசுவாலே நந்தவனம் பாழாகப் போகுதம்மா. அந்தப்பசு தோட்டத்தில் ஆகாசமாய் விழுகுதம்மா அப்போது லட்சுமியும் அடவாக ஓது வைத்தார். பசு வராதபடிக்கு பணிக்கை மிகச் சொல்லுகிறேன். செப்பு ஊசி இரும்பு ஊசி சேர்ந்ததொரு உருக்கு ஊசி மூனு

ஊசியும் முன்னாக நட்டு வையும் என்றார். குதிக்கிற வழியில் குறுக்கே நட்டுவையும் என்றார். அவர்கள் சொன்னபடிக்கு துருசாக நட்டானாம்.

அந்த நல்ல பசு வந்து அலறி விழுந்தது காண் அப்படி பாவங்கள் செய்தவற்கு அடவாக வரம் கொடுப்பதில்லை. மாயவனும் கேட்டு வகையாகத் தான் சலித்து ஈசுவரரே இப்போ என் வார்த்தை கேளும் அய்யா. சங்கையும் சக்கரமும் அடகு மிகத்தான் கொடுத்து வரம் வாங்கிக் கொண்டு வந்து விட்டார். மாயவரும் மூணாங்குளி குளிக்க இருவருமாய்ப் போகையிலே அந்த நல்ல வேளையிலே ஆனதொரு மாயவரும் காற்று மழையும் போல் வளைந்தாரே மாயவரும மழைக் காற்றுக்குள்ளே ஒரு மரத்தடியில் வந்தார்கள். மரத்தடியில் வந்து வகையாக நிற்கையிலே.

உளுத்தமரம் துளிராகி பூவாகிப் பிஞ்சாகி காயாகிக் கனியாகி கனிபழமும் விழுந்தது. அப்போ விழுந்த கனிபழத்தை விருசாகத் தானெடுத்து காவேரிக் கரைதனிலே கனியை மிகக் கொண்டு வந்து கொட்டையொருத்தியும் தோலொருத்தியும் தின்றார்கள். நங்கையரும நாத்தியரும் நன்றாகக்தான் பேசி உன் வயித்தில் ஆண் பிறந்தால் என் வயித்தில் பெண் பிறந்தால் ஒன்றுக்கு ஒன்று உத்துரிமை தாரமென்று கேதாபுரத்தில்

கங்கையைச் சாட்சி வைத்து ஆலமரம் சாட்டி, ஆட்டிடையன் தான் சாட்சி.

பத்து மாதமுஞ்சென்று பாலகனைப் பெற்றெடுத்தார். விதை தின்ற படியினாலே வாள்வீமன் பிறந்தானாம். தோல் தின்றபடியினாலே சுந்தரியும் பெண் பிறந்தாள். அப்ப சுபத்திரையான் ஆனதொரு சங்குப்பாசி சிறுதாலி சிறு கூரை சேர்ந்ததொரு சங்குப்பாசி கொண்டுவந்தது உங்கள் தாயார் கொடுத்தாளே அப்போது சங்கடியான் தேவியென்று சனங்களறிந்த பெண்ணல்லவோ அபிமன்னன் தேவியென்று அனைவரும் அறிந்த பெண் அல்லவோ. ரணமாலன் தேவியென்று நாடறிந்த பெண்ணல்லவோ இந்தப்படியாக எழுதினாள் சுந்தரியாள்.

நாலாமேடு எடுத்து நன்றாகத்தான் பிடித்து அத்தை மகள் மைத்துனனே அடையாளம் சொல்லுகிறேன். பள்ளிக்கூடத்திலிருவரும் பாங்காய்ப் படிக்கைலே பள்ளிக்கூடம் விட்டு பழஞ்சாதத்துமுக்கு வந்து சாதமுந்தின்று தனித்து வழி வருகையில் அக்கிரகார வீதியிலே அருந்ததியாள் வருகையிலே உறைக் கிணத்தை எட்டிப் பார்த்தேனே அப்போது பொன்னாலான எழுத்தாணி பிடி நழுவி விழுந்தது. அந்த நல்ல வேளையிலே அடவாக நானும் அப்போ முத்தான கண்ணீரை முலை மார்பில் சோர விட்டேன்.

பவளம் போல கண்ணீரை பக்கமே சோரவிட்டேன். நான் அழுது புலம்பி அக்கிரகாரத்தில் நிற்கையிலே வளர் இடாய் மேல் ஏறி வந்நீரே, மைத்துனரே, அந்த நல்ல வேளையிலே அடவாகக் கிட்ட வந்து எழுகிற சேதி என்ன அடவாகச் சொல்லுமென்றீர். தங்கத்தால் எழுத்தாணி தரையிலே சோரவிட்டேன். எழுத்தாணி போனால் இனிக் கிடையாதோ பூமியிலே எழுத்தாணிக்குப் பதில் இப்பவே நான் தாரேன் அதுக்கு வேறெண்ணாதே ஆனதொரு பெண்ணே நீ எத்தனை தான் சொல்லி இதமாய் உரைத்தாலும் என் எழுத்தாணி தானும் எடுத்து மிகக் கொடுத்தாள். நீயே புருஷன். நான் உனக்குப் பெண் சாதி. அந்த மொழிகேட்டு ஆனதொரு வாள்வீமன் இவனே என்று வில்வாங்கி போட்டீரே. அப்போது பூட்டிய வில்லைப் போதவே தான் வாங்கி அம்புதனை எடுத்துப் போட்டீரே. அப்போது விட்ட கணை தானும் வேகமாய்ப் பிடித்தது காண் கொண்டு வந்து எழுத்தாணி கொடுத்தீரோ, அப்போது அப்ப அடையாளம் ஆன கணையாழி உன் கைக்கணையாழி என்கையில் தானிருக்க.

என் கைக் கணையாழி உன்கையில் தானிருக்க இதுவுமொரு அடையாளம் எழுதினாள் சுந்தரியாள். அஞ்சான ஓடு எடுத்து அடவாக கைப்பிடித்து என்னவென்று சொல்லி எழுதினாள். சுந்தரியாள்

துரியோதனன் பாவி திகலியத்தைக் கொண்டு வந்து கொள்ளத் துணிந்தான். மாயன் கொடுக்கவே சம்மதித்தான். கல்யாண சோபனங்கள் கடுக முடியுதிப்போ. அரைக்கீரை திருப்பாத்தி அறுக்க நல்ல பக்குவம் காண். சிறுகீரை கொய்ய துரியோதனன் வாரான் சிறுக்கீரைச் சிக்காது நான் தீயில் விழுந்திடுவேன்.

நாகப்பழத்துக்கு நரிவந்து உலாவுவது காண். காவல் அழியுது கண்ணாளர் தேசமெல்லாம். அத்தை மகனானால் அட்ச லட்சணத்தில் வந்து விடும் மாமி மகனானால் மாயமாய் வந்துவிடுன். உன் கைக் கணையாழி என் கையில் தானிருக்க கணையாழி மோதிரத்தைக் கணவனென்று நானிருந்தேன். அக்கினியை வளர்த்தி அதிலே குதித்திடுவேன். ஓலைக்கண்ட நாழிகைக்கு ஒரு நொடியில் வாராட்டி ஓலைப் பிள்ளையார் போலே தீயிலே குதித்திடுவேன்.

நீங்கள் கொண்ட பெண்ணை விட்டாலும் குறித்தப் பெண்ணை விடாமல் கடை சுட்டு ஓலை கடுகவே தானெழுதி அஞ்சேடு தான் எடுத்து அடவாகத்தான் சுற்றி அஞ்சேட்டு மேலே இரங்கு முத்திரையும் போட்டுக் கொண்டு வந்து சுந்தரியாள் கொடுத்தாளே. ஓலைதனை வாயு ராசா வாங்கி வகையாகக் கைப்பிடித்து கடுகவே தான் வாங்கி கடும்பயணம் போகையிலே மாயன்

பெருமாளும் வழிமறிக்க வேணும் என்று பயணத்துக்கு முன்பாக பாம்பாக வந்து நின்று திரும்பியே, வாயுராசா திகுதிகு என்று ஓடி வந்து.

மாயன்மகள் சுந்தரிக்கு மறுவார்த்தை சொன்னானாய். அந்த மொழி கேட்டு அழுது மிக சுந்தரியாள் மாயனுட வித்தை மயக்கமிது ராசமன்னா அதுக்கு வேறு எண்ணாதே. ஆனதொரு பாட்டா நீ நல்லதென்று சொல்லி நடந்தானே, வாயுராசா ஊருகடந்து உருத்திராட்ச பூமிவிட்டு நாடு கடந்து நடுவழியே போகையிலே வங்குநரி போலே வந்தானே மாயவன் அந்த வனம் கடந்து அப்பாலே போகையிலே ஊசிவனங் கடந்து உத்திராட்ச பூமிவிட்டு.

சிள்ளெனுங்காடும் செடியும் வனாந்திரமும் போகிற வழியிலே புதுக்குளமும் இருந்தது அப்போ, அந்தக் குளத்திலே ஆமையிலே ஆயிரமாம், முதலையிலே ஆயிரமாம், மீனுமொரு கோடி அப்படி இருந்த ஆன குளத்திலே கொண்டு வந்த சாதமெல்லாம் குளத்திலே தான் போட்டு அந்த குளத்திலே அடவாகத்தான் கலக்கி ஏரியைத் தான் உடைத்து எதிர்க்க வைத்தான். வாய்தனிலே சாதமுங் குடித்துத் தகையாறிப் போனபின்பு அந்த வனங்கடந்து அப்பாலே போகையிலே.

வாளாலபி மன்னன் வகையான தோழருடன் மணலைக் குவித்து வாளை மிக நிறுத்தி வெள்ளை

நாவற்பழமும் மெத்தவே கொண்டு வந்து தாரா புகழ் படைத்த தருமர் பெரியப்பனுக்கு வெத்தி மதவானை விமர் பெரியப்பனுக்கு ஊரார்புகழ்படைத்த என் தகப்பன் அருச்சுனர்க்கு நகுல சகாதேவருக்கும் நல்ல இலை போட்டு பாஞ்சாலி துரோபதைக்கு பக்கம் படைத்து வைத்து ஐந்து படையலைச் சுற்றி ஆடி வருகையிலே.

சுழி காற்றுப்போலே கழற்றிவிட்டான். வாயுராசா வந்த பயல்கள் எல்லாம் வாரிக் கொண்டு போனதுவே. வாளாலபி மன்ன வாளெடுத்து கக்சைக்கட்டி வாயு ராசாவை வகையாகத் தொடர்ந்தானாம். காலடியில் ஓலையைத் தான் கை நழுவ விட்டு விட்டான். ஓலையைக் கண்டானே உற்றப்புகழ் வாள்வீமன். கைப்பிடித்து ஊருக்கு வாரானாம். மாயவனும் முன்னே வந்து வள்ளுவன் வடிவானான். அப்போது வாள்வீமன் அடவாகத்தான் பார்த்து.

எங்கேயிருந்து எவ்விடத்துக்குப் போகிறாயடா. தூரவடதேசம் துவாரகாபுரி இருந்து வந்தேன் கண்டதொரு காரியங்கள் கணக் கறுததுச் சொல்லுவேன். அப்போது வாள்வீமன் அடவாகக் கேட்டானாம். நீ கொண்டு போகிற ஓலையைக் கொடுக்காதே. ஒருவர் கிட்ட உங்கள் தாயார் இட்டது அப்பாமல் கொண்டுபோய் கொடுமென்று சொல்லி வள்ளுவனும்

போனானாம். நல்லதென்று சொல்லி நடந்தானும் வாள்வீமன் அந்தக்கணமே ஆன குந்தி உள்புகுந்து தாயாரைக் கண்டு தப்பாமல் தெண்டனிட்டு.

கொண்டு வந்த ஓலையைக் கொடுத்தானே வாள்வீமன். யோசனம் பண்ணுமையா புத்தியுள்ள கண்மணியே. அந்த நல்ல ஓலையை அடவாகப் பார்த்தாளாம். மாயன்மகள் கையெழுத்து மகனுக்குக் கேடாச்சு பாவி மகள் கையெழுத்து ராச்சியத்தில் கண்டதில்லை. இந்த ஓலையைக் கண்டால் இருப்பானோ வாள்வீமன் கொண்டு வந்த ஓலையைக் குறுக்கே கிழித்தெறிந்தான். என் தாயே மாதாவே ஓலைச் சேதி சொல்லுமம்மா. ஓலைச்சேதி தரனும் ஒன்றுமில்லைத் தம்பியரே. உங்கள் தகப்பன்மார் ஐவரும் வனவாசம் போகையிலே விசையபுரியம்மன் கோவிலியே விளக்கஞ்சு வைத்தார்கள். அவர்கள் ஆயுதமும் தீட்டி அடைக்கலமாய் வைத்தார்கள். அந்த அம்மன் கோவிலுக்கு போய் அறிந்து வா என் மகனே. நல்லதென்று சொல்லி நடந்தானே வாள்வீமன் வாளெடுத்து கச்சைக்கட்டி வாரானே வாள்வீமன். பத்திரகாளி அம்மன் பங்கான கோவில் சுத்தி பதினாயிரம் சடாமுனிகள் பக்கமிருந்தார்கள்.

ஒத்தைச்சடாமுனியும் ஒரு பல்லு ராட்சதனும் மேட்டிலே போட்டு இருக்கிறது. அந்த முனி பதினாயிரம்

சடாமுனிகள் பக்கமிருந்தார்கள் அந்த மேட்டுத்தடமாக வாரானாம் வாள்வீமன்.

கண்டதே அந்தமுனி கண்கள் பொரி பறக்க யாரடா வாரவனும் அடிக்கிரண்டா தப்பாமல் வாளாலபி மன்னன் வகையாகக் கிட்டவந்து எட்டிச்சடை பிடித்து இரண்டு சுத்து அறுத்து விட்டான். இருந்த முனிகளெல்லாம் எடுத்தது ஓட்டமது அம்மனுங் கண்டு அடைத்தாளே தன் கதவை அம்மனுட சன்னதியில்அடவாக வந்து நின்று யாரடா முனியை அடித்துத் துரத்தினவன். அப்போது வாள்வீமன் அடவாக ஏது சொல்வான்.

தாருபுகழுடைய தருமருக்கு நேரிளையால் வெற்றி மதயானை வீமருக்கு நேரிளையான் அருச்சுனன் குமாரன் அபிமன்னன் நானுமம்மா அப்பேவே பத்திரகாளி அடவாக ஓடிவந்து வாரியெடுத்து வர்ணப் பசுங்கிளியே சேர்த்து எடுத்தத் திரவியமே எங்கே வந்தாய் வந்ததொரு காரியத்தை வகையாகக் சொல்லும் என்றாள் உனக்கு எதிரே முனியெல்லாம் அனுப்பிவைத்தேன். முனிக ளெல்லாம் மிரண்டு வெகுதூரம் போய்விட்டது. அப்பா மகனே அறிவுள்ள கண்மணியே.

வந்ததொரு காரியத்தை வகையாகச் சொல்லிவிடும். அப்போது வாள்வீமன் அடவாக ஏது சொன்னான். ஐவர் வனவாசம் அடவாகப் போகையிலே ஐவருடைய

ஆயுதமும் அடைக்கலமாய் வைத்தாராம். அந்த நல்ல சேதி அடவாகப் பார்க்க வந்தேன் நல்லதென்று சொல்லி நடந்தாளாம். பத்திரகாளி அப்போது கீழுலகில் அடவாகச் சுட்டிப்போய் கதவைப் திறந்து காண்பித்தாள் அம்மனுமே ஐந்த விளக்கு அவியாமல் எரியுது தான் வாளாலபிமன்னா வார்த்தை சொல்ல நீ கேளும்.

ஐவர் வனவாசம் அடவாகப் போகையிலே என் கோவிலுக்கு வந்து கும்பிட்டுத் தெண்டனிட்டு அஞ்சுபேர் ஆயுதமும் அடைக்கலமாய் வைத்தார்கள். பன்னிரெண்டு வருஷம் பாரத்தவம் போறோம். அஞ்சு பேரில் ஒருவருக்கு அவகேடு வந்தாலே அதுக்கு விவரமென்ன ஆயிபத்திர காளியம்மா. அஞ்சு விளக்கிலேயும் ஐந்து பூத்தான் போட்டு பாஞ்சாலி துரோபதைக்கு பக்கம் விளக்கு வைத்து தாரு புகழுடைய தன்மைருட தன் விளக்கு வெற்றி மத யானை வீமருட தன் விளக்கு.

ஊரரார் புகழ் படைத்த அருச்சுனன் தன் விளக்கு நாலு திக்கும் ஒளி வெட்டும் நகுலனுடன் விளக்கு சாய்திரக் கொடி வேந்தன். சகாதேவன் தன் விளக்கு பாஞ்சாலி துரோபதையாள் பத்தினியாள் தன் விளக்கு அஞ்சு விளக்கும் அவியாமல் எரியுது காண். அஞ்சு நல்ல பூவும் அடவாக வாடவில்லை. ஐவருக்கும் சேதமில்லை. அழிவொரு நாள் வாரதில்லை. அஞ்சாதே போடா நீ.

அதுக்கு வேறொண்ணாதே வாள்வீமன் தானும் வகையாகத் தொண்டவிட்டு பத்தினியாள் உள்ள மட்டும் பஞ்சவர்க்கு சாவுமில்லை. பத்திரகாளியுள்ள மட்டும் பாண்டவர்க்கு சாவுமில்லை அத்தானே தாயே அடியேன் நான் போய் வாரேன் உனக்குமொரு அவதியானால் உடனே தான் சொல்லுமடா. ஆபத்துக்கு ஆயுதமும் அடவாய்க் கொடுப்பேண்டா அஞ்சாதே போடா நீ ஆனதொரு வாள்வீமன் ஊசிவனங்கடந்து உத்திராட்சபூமி விட்டு ஆன குந்தி பட்டணத்தை அடவாக உள்புகுந்து சுபத்திராதேவியை சுத்தி வந்து தெண்டனிட்டு தெண்டனிட்ட புத்திரனைத் திக்கென்று தானெடுத்து போலதொரு காரியத்தை புத்திரனே சொல்லுமையா.

தாயே நீ சொன்னபடி சோதனையும் மெய்யாச்சு. ஓலைமிகச் சேதி ஒளியாமல் சொல்லுகிறேன். அப்போ அபி மன்னன் அடவாகக் கேட்டுநின்று அப்போ சுபத்திரையாள் அடவாகச் சொல்லுகிறாள் ஓலையிலே தானும் ஒன்றுமில்லையென்று சொன்னான். ஓலைக் கொடுக்காட்டி உயிர்ச்சேதம் வந்துவிடும். வானில் விழுந்து வாழ்நாளை மாய்த்திடுவேன்.

அந்த மொழிகேட்டு ஆன சுபத்திரையாள் வனம்போல பஞ்சவர்கள் வாரார்களென்று சொல்லி நாடாள வாரமென்று நல்ல ஓலை வந்ததப்பா. ஊராள

வாரமென்று உத்தோலை வந்ததப்பா. ஐவருட ஓலையை ஆத்தாளே தந்துவிடும். அப்பனைக் கானாட்டி அந்த ஓலையைக் காணவேணும். உங்கள் தகப்பனுட ஓலைதனை தாதிகளைக் கேளுமப்பா. தாதிகளைத் தானழைத்து தாருமென்றாள் ஓலைதனை. ஓலையைத் தான் காணோம். இழிச்சோலை கண்டமப்பா இழிச்சோலை தன்னை கொண்டு வாவென்று சொன்னானாம்.

இழிச்சோலை தன்னைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். ஓலையைக் குவித்து ஒரு நொடியே தெண்டனிட்டு பத்தினியாள் ஓலையானால் பழையபடி பொருந்த வேணும். உத்தமியாள் ஓலையானால் ஒன்றாகப் பொருந்தவேணும். ஆக்கரித்துப் பல் கடித்து அதட்டி எழுத்திருந்து வாளையெடுத்து மகரமேராய் நோக்கிவிட்டான் வாளுக்குமுன்னே மார்பை மிகக் கொடுத்தான் வாளும் வருகையிலே மாயன் விலக்கிவிட்டான். ஓலைச்சுருளும் ஒன்றாய் பொருத்தியதே. அஞ்சுகட்டும் கட்டி அரக்குமுத்திரையும் போட்டாப் போல்.

வாசித்துப் பார்த்து வாள்வீமன் ஏது சொன்னான். காசிக்குப் போனாலும் கருமந் தொலையாது. நிற்கத்தரிக்காது. நிலத்தில் கால் பாயாது வாளெடுத்து கக்சைக்கட்டி வகையாக நிற்கையிலே அப்பாமகனே நின்

அடவாகப் போய் வாரேன். அண்ணனையுங்கண்டு அடவாகக் கேட்டுவாரேன். வாள்வீமனை நிறுத்தி வகையான சுபத்திரையாள் சிங்கமுகப் பல்லக்கு சேரவேதான் பிடித்து தாதியரும் பாங்கியரும் தனக்கேற்ற ஆளுகளும் ஆன குந்திவிட்டு அதுகதலி போறாளாம்.

மூங்கில் வனங்கடந்து முன்னூற்றுக்காத வழி சிள்ளென்னுங்காடு செடியும் புனங்கிடந்து சங்குதுவாரகாபுரிக்குத் தானாக வந்திறங்கி அண்ணாருட அரண்மனைக்கு அதுகதலி வாராளாம். மாயவனைக் கண்டு வகையாகத் தெண்டனிட்டு தெண்டனிட்ட தங்கையரைத் திக்கென்று தானெடுத்து வந்ததொரு காரியத்தை வகையாகச் சொல்லுமம்மா. அந்தநல்ல வேளையிலே அடவாக ஏது சொன்னாள். துரியோதனன் பாவி சேரத் துரத்திவிட்டான் அப்படியே என்னை அகல துரத்தினாயே.

உன்மகள் சுந்தரியாள் ஒரு ஓலை எழுதிவிட்டாள். அதுகண்டு ஓடிவந்தேன் ஆண்டவனே புத்தி சொல்லும். நல்லது தங்கையரே நான் சொல்லக் கேளுமம்மா கலியாணமென்று நான் சொன்னதே இல்லையம்மா. சோபனமென்று நான் சொன்னதே இல்லையம்மா உன் பெண்ணை நான் கொடுக்க உலகத்துக்கேறாது பெண்ணிருக்கும் வீடு பெரிய தாசிமனைக்கு ஒப்பிடலாம்.

வென்னீர் கொதித்தால் வீடுதான் வேகாதம்மா. யாருதான் சொன்னாலும் அஞ்சாதே தங்கையரே அந்த மொழிகேட்டு நாத்தியுண்டு நமக்குத் தெரியாது. அந்த மொழிகேட்டு ஆன சுபத்திரையாள் அண்ணனுட தேவிகிட்ட அடவாக வந்தாளாம் வந்ததொரு நங்கையரே வாய்க்கரிசிக்கு இல்லையோ கட்டினதாலிக்கு மணி இல்லையோ.

வெய்யிலிலே எங்கே வந்தாய் வெட்கங்கெட்ட நங்கையரே. அந்த மொழிக்கேட்டு ஆன சுபத்திரையாள் எப்படி தான் சொன்னாலும், என்னுரிமை போகாது அப்போது லட்சுமியும் அடவாக ஏது சொன்னாள் உரிமையென்று சொன்னதுக்கு உனக்கேற்ற புத்தி சொல்வேன். அப்போ சுபத்திரையாள் அடவாக ஏது சொன்னாள்.

பெண் கொடுக்க சம்மதித்த பிற சாட்சி உண்டு என்றாள். அந்த நல்ல சேதி கேட்டு லட்சுமியும் ஏது சொன்னாள். சாட்சியென்று சொன்னாயே தட்டவட்டஞ் சொல்லாதே. காட்சியும் மெய்யானால் தருவேண்டி பெண் உனக்கு இவ்விரண்டு பேரும் சாட்சிக்குப் போனார்கள். கேதாபுரத்தில் கெங்கை கிட்ட வந்தார்கள். அப்பவே லட்சுமியும் அடவாக ஏது சொன்னாள். வற்றின கெங்கை மகமேராய் வந்தாங்கால் அப்பவே நானும் அடவாகப்

பெண் கொடுப்பேன். அப்பவே சுபத்திரையாள் ஆண்டவனைத் தானினைத்து.

கெங்காபுரியம்மா கீர்த்தியுள்ள என் தாயே அன்று சொன்ன வார்த்தை அபத்தமே ஆனாக்கால் இருக்கிற தண்ணீர் இடை வற்றிப்போக வேணும். சொன்னதே மெய்யானால் சோதனையாய் வரவேணும் . அந்தபடிக்கு ஆண்டவனைத் தெண்டனிட்டாள். வடக்கே சுருக்கி மகமேராய் மழை விழுந்து வருகிறது. வெள்ளம் மகமேராய் பொங்கியப்போ. காவேரியம்மாள் கை நீட்டிச் சொன்னாளாம் சாட்சியு மூன்று தங்கச்சி பெண் கொடுத்து விடும் அப்படி சொல்லி அடவாய் மறைந்தாளாம்.

ஆமடி மருந்துக்கள்ளி அறிவேண்டி உன் சேதி இரண்டாவது சாட்சி உண்டென்றாள். சுபத்திரையாள் இரண்டாவது சாட்சிக்கு நன்றாக வந்தார்கள். ஆலமரமும் அமர்ந்த விநாயகனும் அவர்கிட்ட வந்து அடவாகத் தெண்டனிட்டு எனக்கு மிக காட்சி இதமாகச் சொல்லவேணும் என்று சொல்லி சுபத்திரையாள் இதமாகக் கேட்டாளாம். அப்பவே லட்சுமியாள் அடவாகச் சொன்னாளாம். தழைக்கமரம் இலை உதிர்ந்து தரை தீண்டி தான் கொடுத்தால் அப்படியே நானும் அடவாகப் பெண் கொடுப்பேன்.

நல்லதென்று சுபத்திரையாள் விநாயகரைத்தான் தொழுது இடசாரி சுத்திவந்து பசாரி தெண்டவிட்டு அன்று சொன்ன வார்த்தை அபத்தமேயானாக்கால் பெண்ணுமிக வேண்டாம் பேசாதே போறேனையா. ஆண்டவனைத் தனினைந்து அடி தொழுது தெண்டனிட்டாள். மரத்தைத் திசை நோக்கி வகையாகத் தெண்டனிட்டான். அப்போது ஆலமரம் அடவாகத் தான் பார்த்து அப்பதழைஞ்சமரம் இலையுதிர்ந்து தரை தீண்டி கொடுத்ததுவே அப்போது லட்சுமியாள் அடவாகச் சொல்லுவாள் மருந்துக்கள்ளி என்று அறியேன் வந்தேனே உன் பிறகே.

என்று சொல்லிப்போட்டுப் போனாளே லட்சுமியாள் அப்போது ஓடிவந்து சுபத்திரையாள் அடவாகச் சொன்னாளாம். இன்னுமொரு சாட்சியுண்டே இதமான நங்கையரே. அப்போது நங்கையர்க்கு அபத்தங்கள் வந்தது என்று மாயன் பெருமாளும் வந்தாரே இடையனைப் போல் ஆரடா அண்ணா அங்கே தான் போகிறவந்தான். நான் தாண்டி அம்மா நல்லதொரு ஆட்டிடையன். இட்ட மிகவந்து கேட்டாயோ அண்ணாவே அன்றைக்குப் போகையிலே உன்னைக் சாட்சியும் வைத்தது. உண்டில்லையென்று ஒளியாதே சொல்லிவிடும்.

அப்போது ஆட்டிடையன் அடவாகக் கிட்ட வந்து இருவர் இரண்டு பேரும் இது தடமாய்ப் போகையிலே உன் வயித்தில் ஆண் பிறந்தால் இவன் வயிற்றில் பெண் பிறந்தால் உத்துரிமை கொடுப்போமென்று கைபோட்டுச் சொன்னதுண்டு. அதுக்கு என்னைச் சாட்சிவைத்த அடையாளம் உண்டு அம்மா என்று சொல்லிச் சொன்னதுக்கு இயல்பான லட்சுமியாள் உன் தலையை நாய் கடிக்க நன்றாகச் சொன்னாயடா. உங்கள் இடைக்குலங்கள் உனக்கேதான் சொல்லுமடி என்று சொல்லிப் போட்டு இயல்பாகப் போகையிலே பெண் கொடுக்க வேணுமென்று பிறகேதான் போய் எழுத்தாள்.

எட்டிமயிர் பிடித்தாள் இயல்பான லட்சுமியும் ஒருவர் மயிர் ஓயாமல் சண்டையிட்டாள். அந்த நல்ல வேளையிலே ஆனதொரு சுந்தரி அத்தை தான் வந்ததை அடவாகத்தான் கேட்டு சிங்கமுகப்பல்லர்க்கு சேரவே ஏறிக் கொண்டு ஓட்டமாய் ஓடிவந்து ஒரு நொடியில் தான் புகுந்து. மாமியாரைத் தூக்கி மாதாவைத் தான் பிடித்து அப்பவே தாயாரை அடவாகக் கைபிடித்து நின்றால் குத்தும் விழுந்தால் உதையுமாய் ஆத்தாளைத் தள்ளி அத்தையரைக் கூட்டிவந்து.

சிங்கமுகப்பல்லக்கு கடிணத்திலே ஏறிக்கொண்டு அரண்மனைக்கு வந்து அடவாய் இளைப்பாறி

ஏலங்கொடுத்து இளநீருந்தான் கொடுத்து சம்பங்கி எண்ணெய் கொண்டு தலைக்கோதி சினுக்கறுத்து சாப்பாடும் போட்டு தயவாய் இளைப்பாறி போகிறேன்டி சுந்தரியே புத்தியுள்ள கண்மணியே. கலியாணச் சேதி கலக்கமில்லை விட்டுவிடும். அத்தையரே நீ தானும் அடவாகக் கேளும் இப்போ. ஆரிய குல வங்கிஷத்தில அழிவொரு நாள் வந்ததில்லை. கொண்ட பெண்ணை விட்டாலும் குறித்த பெண்ணை விடுவதில்லை. அந்த மொழிக்கேட்டு ஆன சுபத்திரையாள் எதுக்கும் அஞ்சாதே. ஏலக்கருங்குயிலே என்று சொல்லி பல்லாக்கு ஏறினாள். சுபத்திரையாள் ஊருகடந்து உருத்திராட்ச பூமிவிட்டு அகிண்ட வனங்கடந்து அயிராவதங்கடந்து அஞ்சு வனங்கடந்து ஆனகுந்தி உள் புகுந்தாள்.

வாளாலபி மன்னன் வாரதைக் கண்டானே வந்தாயே தாயே என்று வகையாக தெண்டனிட்டு போனதொரு காரியங்கள் புதுமையை சொல்லுமம்மா. போனதொரு காரியங்கள் பெண் கேட்டு வந்தனம்மா. மாயன் மகள் சுந்தரியாள் வார்த்தைகள் மெத்தவுண்டு தொடையும் முழங்காலும் தூணும் பெருத்தால் போல் காலுந்தலையும் கரடி மயிரது போல் என்னோடே பிறந்து இன்னமொரு தம்பியுண்டு.

அவன் பின்னேயானால் ஆகுமே தம்பியரே. அந்தப் பெண்ணும் தானும் அடவாகக் கேட்டு வந்தேன். இடைய பெண் கிடையாதோ என்மகனே வாள்வீமா இடையனென்று சொன்னயே. என்தாயே மாதாவவே நீயும் இடைச்சியல்லோ உன்மகனும் இடையனல்லோ. மாயன்மகள் வார்த்தை மாதாவே சொல்லாட்டி சங்கு துவாரகாபுரிக்கு தாயாரே போய்வாரேன்.

அப்பா மகனே அன்பாகச் சொல்லுகிறேன். அண்ணனைக் கண்டு, அடவாகப் பேசி வந்தேன். உன் தேவியரைக்கணடு சேதியெல்லாம் கேட்டு வந்தேன். வேறேயொரு காரியங்கள் வினைவாரதில்லையம்மா என்று சொல்லித் தானும் இருந்தார்கள். அப்போது அந்தநல்ல வேளையிலே ஆன துரியோதனனும் லக்குணகுமாரனுக்கும் நல்லதொரு சுந்தரிக்கும் கலியாண ஓலைக் கடிதம் எழுதிவிட்டாள்.

மன்னர்படை சூழ மந்திரிமார் தான் குழு நாளை வெள்ளிக்கிழமை விசய தசமியிலே

பங்குனிமாதம் பதினைந்தாம் தேதியேலே பூமியிலே கூடாரம் போட்டார்கள். கலியாணமென்று சொல்லி கணக்க முறசறைந்தார்கள். அத்தினாபுரந்தன்னில் அடவாக வந்திறங்கி முத்துக்குடை மன்னர் முப்பது நூறாயிரமாம் பவளக்குடை மன்னர் பத்து நூறாயிரமாம் பேச்சு மூச்சு

அறியாத பேய்வகைக்கு ஆயாயிரமாம் காச்சுமூச்சென்று கண்ணடியராயிரமாம் கீச்சு மூச்சென்று இங்காலியராயிரமாம். மலுக்கர் துலுக்கர் மாதர் சேனை ஒருகோடி, துலுக்கரொரு கோடி துளுவர் ஒருகோடி துரியோதனன் தேரும் தென்னவர்கள் தன்தேரும், கர்னனுடதேரும், காங்கயனார் தன்தேரும், விதரனுட தேரும், வில்லியுட தன்தேரும், சகுனியுடதேரும் சல்லியுடதன்தேரும், துரோணருட தேரும், திட்டோதிரன் தேரும். வீபீஷ்ணுமாசாரியார் விதமான தேரேறினான். அசுவத்தாமன் ஆனவெள்ளித் தேர் ஏறினான். கொன்றைமலை தேசத்தரசன் ஒருகோடி மன்னவரும் தேவேந்திரன் மகன் சித்திரசேனன் தன்தேரும் மன்னர்படை சூழ மந்திரிமார் தான்சூழ ஏழக்குரோணி சேனைபடை எல்லோருங் கூட்டமிட்டு கருப்பு மிகடாலும் கணக்கு வழக்கமில்லை வெள்ளி மிகடாலும் விலை மதிக்கப்போகாது அனுமந்தடாலும் அளவு அறுக்கப் போகாது.

எழுத்துமிகடாலும் எண்ணத்துலையாது யானையிலே ஒரு கோடி அடவாய்ப்படை எடுத்து குதிரையிலே ஒரு கோடி கூடப்படையெடுத்து ஒட்டகையில் ஒரு கொடி ஒன்றாய்ப் படையெடுத்து வெள்ளிரதம் ஆயிரமாம் வெண்கலரதம் ஆயிரமாம் பதினெட்டு அக்குரோணிபடை பாங்காய்ப் படையெடுத்து பீரங்கி ஆயிரமாம் பெரிய

குழல் ஆயிரமாம் வாணரங்கள் ஆயிரமாம் கொலாரி வண்டில் ஆயிரமாம் வானத்து மீன்போலே மன்னர் படையெடுத்து சங்குதுவாரகாபுரிக்கு யானை படை சேனையெல்லாம் அத்திபுரங்கடந்து குருஷேத்திரப் பூமி கூடவே தான் கடந்து அரிண்ட வனங்கடந்து அயிராவதம்கடந்து செந்தூண் கிளப்புகிறது. தெய்வலோகம் சேரும் அது.

கருந்தூள் கிளம்புகிறது. கருமலைகள் தெரியாது. சந்திரனும் தெரியாது. சூரியனும் தெரியாது. மூங்கில் வனங்கடந்து முன்னூற்றுக்காத வழி சின்னெனுங் காடும் செடியும் வனாந்திரமும் அந்த வனங்கடந்து அப்பாலே போகையிலே கனகமலை இடம் வைத்து கரடி மலை கால்நீட்டி அம்புதனைத் தீட்டிக்கொண்டு அங்கிருப்பான் அரவானும் காலை மிகக் கண்டார்கள் கனத்த படை மன்னரேல்லாம்.

துரோணாசாரிதானும் துருசாக ஓடி வந்து காலை மிக வாங்குமடா கட்டழகா அரவானே. கால் வாங்கச் சொன்னதுக்கு கண்டதுண்டம் ஆக்குவண்டா. காலுங் கீழே போங்களென்று தடுக்கவே சொன்னானாம். வீஷ்டுமாச்சரியார் விருசாக ஓடி வந்து துரியோதனனே தென்னவனே நீர் கேளும் பெண் கொள்ள வேணுமென்றால் போகாமல் போகவேணும். அந்தப் படிக்கு அவன் காலுங்கீழே போனார்கள்.

அந்த வனங்கடந்து அப்பாலே போகையிலே சங்குதுவாரகாபுரிக்கு தளமெல்லாம் வந்திறங்கி மாயவரும் கண்டு வகையாக வாரும் என்றான். வந்த உறவு முறைக்கு வகையாக விடுதி விட்டு நம்முட கோட்டைக்கு நூறு தலை வாசலுண்டு. நாலு தலைவாசலுக்கு நல்லரக்கர் காவல் வைத்து கோட்டை சுற்றி பாளையங்கள் கொற்றவனே போடும் என்றார். கல்யான காரியங்கள் கடுகெனவே ஆக வேனும்.

கல்யாணம் சேர நாடு இரண்டு நாளைக்குக் காணாது? என்று சொல்லி மாயவனும் ஏற்கனவே ஒன்றை எண்ணி மாயன் பெருமாளும் மாயமாய்ப் போனான் காண். கருடனென்று வேஷம் தேசரி மார்ககமாய் அந்த வனங்கடந்து ஆரணியர் தான் கடந்து ஆன குந்தி பட்டணத்தில் அடவாக வந்திறங்கி பார்ப்பான் வடிவெடுத்து பஞ்சாங்கம் கைபிடித்து மூன்று முழவேட்டி பீத்தலுமாய்.

நாலுமுழவேட்டி நாற்பது பீத்தலுமாய் பழுத்தபழம் போலே பல்லுத் தரனொன்றும் இல்லை. வாள்வீமன் அரண்மனைக்கு வந்தானாம் பார்ப்பானும். சுபத்திரையாள் அரண்மனைக்கு துரிசாக வந்தானாம். பார்ப்பானைக் கண்டு பக்கமே ஓடி வந்து எந்த ஒலையோ எங்கே வந்தாய் இப்போது என்று தான் கேட்கிலுமே

இன்பமுடன் பிராமணனும் தூரவடதேசம் துவாரகா புரிச்சீமை.

சங்க துவாரகாபுரியில் என் தங்கச்சி சொல்லிவிட்டாள். மாயன்மகள் சுந்தரிக்கு வரிசைக் கல்யாணமென்று நாளைக் கல்யாணமென்று நல்லோலை வந்ததம்மா. அதுகண்டு போகிறேன். எனக்கு ஐந்து பொன் தான் வருமே. சொன்னது கேட்டு சுபத்திரையாள் அப்போது வீண் பேச்சுப் பேசாதே வெளியிலே போடா நீ. யோசனையும் வேணுமம்மா புத்தியுள்ள சுபத்திரையே அப்போது அரிசிபடி அடவாகத் தான் கொடுத்து வேட்டியிலே போட்ட அரிசி வேளியே சிந்திப் போகிறது.

அப்போது புதுவேட்டி அடவாகத்தான் கொடுத்து வேட்டியிலே போட்டு வெளியேதான் போடா நீ. தண்ணீர் தவிக்கிறது, தரவேனும் என்றானே நீர் மோரு தான் கொடுத்து நில்லாதே போடா நீ. அந்த நல்ல வேளையிலே அபிமன்னன் வந்தானாம். பார்ப்பானைக் கண்டு வாள்வீமன் ஏது சொல்வான். எந்த ஊரைய்யா எங்கே வாள்வீமனை் வந்தாய். இப்போது என்று தான் கேட்கிலுமே இயல்பான பிராமணனும்.

கல்யாண வாசலுக்குக் கடுகவே போகிறேன் நான். கலியாண வாசலிலே எனக்குக் காணிக்கை மெத்த உண்டு. அதுகண்டு போகிறேன் நான் ஆனதொரு வாள்வீமா

அப்போது பார்ப்பான் அடவாகப் போகவென்று தள்ளாடி எழுந்திருந்து தலைவாசல் படிதடுக்கி வகையாய்ப்போய் விழுந்தானாம் சுபத்திரா தேவி கண்டு தோஷம் வந்து சேருமென்று வாடா மகனே வாள்வீமா நீ தானும்.

அய்யன் பிறகே அடவாகப் போய் வாடா அப்போது வாள்வீமன் ஐயம் சுமை தானெடுத்து நந்தவனத்துக்குள்ளே நன்றாகச் கூட்டி வந்தான். பார்ப்பானும் அப்போ பட்சமாய்ச் சொல்லுகிறேன். தம்பியடா வாள்வீமா என் பேச்சுத் தட்டாதே. கொல்லடா வென்று துரை அபிமன்னன் கேட்டானாம். அப்போது வென்று துரை அபிமன்னன் கேட்டானாம். அப்போது பார்ப்பான் அடவாகச் சொல்லுகிறேன். எனக்கு வசமல்ல இனிக்கேளும் என் வார்த்தை.

தவலையெடுத்து தண்ணீர் கொண்டா நீ. எங்களுடைய ராச்சியத்தில் எல்லாம் சரி தாண்டா. அதுக்கு வேறெண்ணாதே ஆன தொரு வாள்வீமா நல்லதென்று சொல்லி நடந்தானே வாள்வீமன்.

தண்ணீருங் கொண்டுவந்து
தான் கொடுத்தான் வாள்வீமன்.

தண்ணீருலையில் வைத்து தணலையும் மூட்டு மென்றான். அரிசியும் போட்டு சாதமும் வெந்ததுவே சாதமுந்தானிறக்கிச் சாப்பிட வாருமென்றான்.

அப்போது வாள்வீமன் அடவாகச் சொல்லுகிறேன். ஐயனே நீரும் ஆசனமும் பண்ணுமென்றான். உன்னைவிட்டு நானும் உண்பதில்லை சாதம் என்றான். வாள்வீமனை அழைத்து வகையாய் இலை போட்டு இருவர் இரண்டு பேரும் இலைக்கு நீர் தான் தெளித்து சாதம் பரிமாறிச் சாப்பிட்டார். இருவருமாய் போசனமும் பண்ணிப் பூந்தோட்டத்தில் இருக்கையிலே அய்யனும் அப்போது அடவாகச் சொல்லுகிறேன். கல்யாணம் சுந்தரிக்கு கடிதால் முடியுது. இப்போ இருவர் இரண்டு பேரும் நடப்போம் இது பயணம் தாயாருடன் சொல்லி தப்பாமல் வாரஎன்றான். என் பிறகே போகச் சொன்னாளே உன் தாயார் அதுவே பயணம் என்று அடவாய் நடந்தார்கள். நல்லதென்று சொல்லி நடந்தார்கள். இருவருமாய் அந்த வனங்கடந்து அப்பாலே போகையிலே.

மூங்கில் வனங்கடந்து முன்னூற்றுக்காத வழி இருவர் இரண்டு பேரும் இயல்பாகப் போகையிலே மருமகன் சவுரியத்தை வகையாகப் பார்க்கவேணும். ஏழக்குரோணி சேனை முன்னே எதிர்ப்பானோ வாள்வீமன் அப்போது பார்ப்பான் அடவாய் மறைந்தானாம். அப்போது வாள்வீமன் அடவாகத் தான் பார்த்து பொய்யை மிகச் சொல்லி போய் மறைந்தான். பார்ப்பானும் இப்பவே கண்டால் இருதுண்டம் ஆக்கிடுவேன்.

இத்தனை தூரம் வந்து இனிப் போகிறது, நியாயமல்ல, வாள்வீமன் தானும் வழிநோக்கி வாரானே. மாயனும் தானும் வகையாக முன்னே வந்து வாள்வீமனுக்கு முன்னே பொருநை ஆறு வந்ததுவே. வாளால் அபிமன்னன் வந்திறங்கித் தென்டனிட்டு மார்பளவு தண்ணீரிலே வாராணாம் வாள்வீமன். நடக்க நடக்க நல்லாறு வாய் அளவாய் வாயளவு தண்ணீரிலே வாரானாம் வாள்வீமன்.

ஆகாசமாக ஆறுகொண்டு போகுது அப்போ. வாள்வீமன் தானும் வகையாக நீந்தி அப்போ யோசனை தூரம் ஓயாமல் நீந்தி அப்போ கையசந்து மெய்யசந்து கனக்கவியா நீந்திஅப்போ ஆற்றோடேப் போகிறானே ஆனதொரு வாள்வீமன் பார்த்தாரே மாயவரும் பழிவந்து சேருது இப்போ என்று சொல்லி எதுக்கவே ஒடி வந்து தெர்ப்பைப்புல்லாகத் திரளைய வந்து நின்றான்.

தெர்ப்பையைத்தான் பிடித்து சேர்ந்து இளைப்பாறி நாலுதிக்கும் பார்த்து நல்தொரு வாள்வீமன் வாளையெடுத்து மகமேராய் நோக்கிவிட்டாள். வாளும் வருகையிலே வலது கையிலேர பிடித்து வெட்டினான் வாள்வீமன் வீரமணிக்கையாலே இருபுறமுந்தான். தண்ணீர் இருகாதவழிபோனதுவே மறுபடி வாளெடுத்து வகையாக வெட்டினான். தண்ணீர் நின்ற இடமெல்லாம் தனிமேடு ஆனதுவே.

அள்ளுபொடி துள்ளுபொடி ஆனதுவே. அப்போது கரை விட்டு மேபேறி கானகத்தில போனதுவே. மாயன் பொருளும் வகையாக முன்னே வந்து வல்லரக்கன் வனத்திலே வகையாக ஓடி வந்து மாயன் பெருமாளும் வனத்தில ஒன்று காணாமல் கரடி புலி சிங்கம் காணாமல் போக வென்றான் வல்லரக்கன் கண்ணிலே காணாமல் போனதுவே வல்லரக்கன் தானும் வனத்திலே வாரானாம்.

இரைத் தேடித்தானும் எங்குத் திரியயிலே வல்லரக்கன் தானும் வனங்கள் சுற்றிப் போயிருக்க அப்போது வாள்வீமன் அரக்கன் வனம் புகுந்து வாளலபிமன்னனுக்கு வகையாய் இளைப்பாரி வல்லரக்கன் படுக்கிற வட்டப்பாயைதனிலே பாறையின் மேலே படுத்தானே வாள்வீமன் கண் அசந்து வாள்வீமன் களையாகத் தூங்கி விட்டான் அந்த நல்ல வேளையிலே ஆனதொரு நல்லரக்கன்.

மலைகள் செடிகளெல்லாம் வகையாகச் சுற்றிவந்து வயிற்றுக்கு இரை சிக்காமல் வல்லரக்கன் வாரானாம். நீலவிழிக்கண்கள் இரண்டும் நெருப்புத் தனலாகுது தின்னு மிஞ்சிதம்பலங்கள் தீக்கலந்து வேகிறது பாறை திசை நோக்கி வாரானாம் நல்லரக்கன். அந்த நல்ல வேளையிலே ஆனதொரு வாள்வீமன் என்னென்ன சொற்பனங்கள் ஏகமாய்க் காணுகிறான். துரியோதனன் சேனையெல்லாம் சேரவே தான் துரத்தி.

மாயன்மகள் சுந்தரியை மாலையிடப் போனாப்போல் அம்மி வலமாக அரசானி முன்னாக சுத்தி வந்து வாள்வீமன் சுண்டுவிரல் பிடிக்கையிலே அந்த நல்ல வேளையிலே ஆனதொரு வல்லரக்கன் பாறையின் மேல்வந்து பயலை மிகக் கண்டானாம் ஆரடா பயலே அசந்து மிகத் தூங்குகிறவன் எழுப்பி பிட வல்லரக்கன் எதிராக நின்றானாம் அப்போது வாள்வீமன் அடவாக நிற்கையிலே. வல்லரக்கன் தானும் வகையாக ஏது சொல்வான் எந்த ஊரடா பயலே எனக்கு இரை ஆச்சுதடா என்று தான் சொல்ல இயல்வான வாள்வீமன் இன்று பிழைத்தேன். ஈடேறிப் போனேன் நான் வல்லரக்கன் வனந்தேடி வந்தேனே. இப்போது என்னன் நீ தித்த எத்தனை பாக்கியம் செய்தேன் நான் நான் தூங்கி எழுந்திருந்தா தோஷம் உண்டு ஐயாவே ஸ்நானம் பண்ணிப் பின்பு சாப்பிட்டால் தருமம் உண்டு.

காலைப் பசியடா கண்டிப்பாய் ஆகுதிப்போ. பல்லாய் பசி நீங்குமென்று பலபேரும் சொன்னது உண்டு கோபம் வருகுதடா கொன்று தின்போன். இப்போது அப்போது வாள்வீமன் அடவாக ஏது சொன்னான் தூங்கி எழுந்து இருந்த தோஷம் உண்டு ஐயாவே படுதது எழுந்திருந்த பாவம் உண்டு ஐயாவே ஸ்நானம் பண்ணி நின்றால் தருமங்கள் மெத்த உண்டு ஆற்றங்கரைக்குப்

போய்வாரேன் வல்லரக்கா போவேண்டு சொன்னானே போல்லாத வல்லரக்கன்.

தண்ணீரிலே தானும் ஸ்நானம் பண்ணி வாள்வீமன் பத்திரகாளி கோவிலுக்கு பாங்காக ஒடி வந்து அம்மனையும் கண்டு அடி வணங்கி தெண்டனிட்டான் ஏண்டாமகனே எங்கே வந்தாய் சொல்லுமடா அப்போது வாள்வீமன் எங்கே அடவாகச் சொல்லுகிறான். மாயன்மகள் சுந்தரியை மாலையிட வேணுமென்று வல்லரக்கன் வனத்திலே வழித்தப்பி வந்தேன். நான் வல்லரக்கன் கண்டு வகையாகக் கைப்பிடித்து எனக்குப் பசிக்கிறது உன்னை விடப் போகிறதில்லை என்று சொல்லி வல்லரக்கன் இயல்பாய் இருக்கையிலே.

ஸ்நானம் பண்ணிவாரேனென்று. தடஞ்சொல்லி வந்தேனம்மா. தப்பிப் பிழைத்து வந்தேன் தாயாரே வரந்தாடி வல்லரக்கனைக் கொல்ல வாள் கொடுக்க வேணுமம்மா. அப்போது பத்திரகாளி ஆயுதமும் கைப்பிடித்து வாழ்த்தி விடைக் கொடுத்து மந்திரவாள் கைக்கொடுத்து வல்லரக்கன் சீவனை வகையாகக் கொல்லுமென்றாள். வாள்வீமன் தானும் வடபத்ர காளியைத் தெண்டனிட்டு ஆத்தாளே தாயே எனக்கு ஆன துணை நீயல்லவோ.

மாதாவே தாயே எனக்கு வார்த்தை துணை நீயல்லவோ போகிறேன். என்று தானும் புகழ் வீமன் தெண்டனிட்டான் போற்றி விடை கொடுத்தாள் பொற்காளி அப்போது ஆயுதமும் வாங்கி ஆற்றங்கரைக்கு அடவாகத் தான் நடந்தான் அந்த வனங்கடந்து ஆற்றங்கரைக்கு வந்தான் பயலையும் காணாமல் பார்க்கிறான். ராட்சதனும் காணாமல் தேடி கரையோரம் வருகையிலே கண்டானாம் பயலை கடுங்கோபம் ஆனதுவே.

வாளை நிறுத்தி வாள் பூசை பண்ணையிலே வல்லரக்கன் பார்த்ததுண்டு பயலே நீ இந்நேரம் போனதுக்கு என்ன புத்தி பண்ண வேணும். வண்டப் பயலே வாடா நீ திட்டெனவே. அப்போது வீமன் அடவாக, ஏது சொல்வான் பயலென்று சொன்னதுக்கு உன் பல்லைப் பிடுங்குவண்டா. என்னை மறித்ததுக்கு இரண களம் பண்ணுவண்டா. தின்கிறேன் என்றதுக்கு உன் சீவனை வாங்கிடுவேன்.

அமட்டி எழுந்திருந்தான் ஆனதொரு வாள்வீமன் அப்போது வல்லரக்கன் அடவாகத் தான் பார்த்து மோசம் ஆச்சுது முழு மோசம் வந்தது என்று பயலென்று நான் இருந்தேன். பழிகாரன் ஆனதுவே கடக்க மிகப் போய் ஒரு கல்லை உருட்டிவிட்டான். வாரதொரு

கல்லையெல்லாம் வகையாகத் தட்டி விட்டான் போதமலை பிடுங்கிப்போட்டானே வல்லரக்கன் வாளையெடுத்து வடபத்திரகாளியைத்தான் நினைந்து.

போதமலை வருகிறதை போட்டானே வாள்வீமன் போதமலை அத்தனையும் பொடி பொடியாய்ப் போனதுவே. கொல்லி மலைப் பிடுங்கிக் கோபித்துப் போட்டானாம். கொல்லி மலை அத்தனையுங் குருணையாய்ப் போனதுவே. மறித்தும் ஒருமலைப் பிடுங்கி வாள்வீமன் மேல் போட்டான். எதிர்ப்பட்ட மலைகளெல்லாம் இலவம்பஞ்சு ஆனதுவே. அவன் கால்பட்ட மலைகள் எல்லாம் கடுகுபொடி ஆனதுவே. வல்லரக்கன் பார்த்து மாளமுடி நாளாச்சு.

மலையிலே உள்ள மரமெல்லாம் பிடுங்கி வந்து சேர்த்து அடித்தானாம். தேக்குமரம் அத்தனையும் வருகிற மரத்தை எல்லாம் வாளாலே தட்டிவிட்டான். வாளாலபி மன்னன் வாளெடுத்துக் கச்சைகட்டி ஐவரையும் தான் நினைந்து ஆயுதமும் கைப்பிடித்து பத்திரக்காளி அம்மனையும் பாங்காகத் தான் நினைந்து வாளை உருவி வல்லரக்கன் மேல் போட்டான் வல்லரக்கன் தலையும் மலை போலே விழுகையிலே.

பட்டானே வல்லரக்கன் கேட்டானே கமலக்கன்னி. கமலக்கன்னிக்கு அபயமென்று காகைத்தில் விழுந்தானே.

வல்லரக்கனை வெட்டி வாள்வீமன் நிற்கையிலே அபயம் என்ற சத்தம் கமலக்கன்னி தான் கேட்டு கமலகன்னி எழுந்திருந்து கடோற்கசனே வாடாநீ கடோற்கசனும் ஓடி வந்து கண்டானே. தாயாரை அப்பா மகனே ஒரு அதிசயம் கேட்டேனே. கமலக்கன்னிக்கு அபயம் என்ற சத்தம் காதிலே விழுந்தது.

வனம்போன பஞ்சவற்கு ஒரு வஞ்சனைகள் வந்ததோ வல்லரக்கன் உன் மாமனுக்கு ஒரு வஞ்சனைகள் வந்ததோ. ஆமென்று சொல்லி அளவறுத்து வாடா நீ போய்வாரேன் தாயே போசனமும் வேணுமென்றான். கட்டுச்சோறு கட்டி கடுகவே தாருமென்றான். சாதமும் கட்டித் தப்பாமல் கொண்டு வந்து கொல்லிமலை போலே கொடுத்தாளே. அப்போது கட்டுச்சாதம் வாங்கி கடுகவே போகவென்று.

வாளெடுத்துக் கச்சைக்கட்டி வண்ணத்தடி எடுத்து அந்த வனங்கடநது அப்பாலே போகையிலே வல்லரக்கன் வனத்தில் வந்தான். கடோற்கசனும் வல்லரக்கனைக் கண்டு வாய்விட்டுத்தான் புலம்பி அழுது புலம்பி ஆக்கரித்துப் பல்கடித்து மாமனையும் வெட்டும் ஒரு ஆண்பிள்ளையும் உண்டோதான் என் மாமனை வெட்டுகிற வலுக்காரன் உண்டோதான் எங்களுக்குப் பலத்தவன் ராச்சியத்தில் உண்டோதான்.

நீலவிழிக்கண்கள் இரண்டும் நெருப்புத் தனலாகிறது தின்னு மிஞ்சிதம்பலங்கள் தீக்கலந்து வேகிறது. தாரையெடுத்து தடனோக்கி வாரானாம். வார இடத்திலே வாள்வீமன் தான் இருந்தான். நாகமரத்துமேலே நன்றாகத் தான் இருந்தான். அண்ணாந்து பார்த்து ஆன கடோற்கசனும் நாகமரத்து மேல் இருக்கும் நல்லதொரு சிறுபயலே எங்கள் மாமனை வெட்டினவன் இங்கே வரக் காணாயோ.

அப்போது வாள்வீமன் அடவாக சொல்லுகிறேன் திக்கு விசையம் போலே தெற்கேயும் போகிறண்டா அடியின் பிறகே அநேகந் தூரந்தான் தொடர்ந்து காணாமல் தானும் கடோற்கசனும் வாரானே. பொய்யை மிகச் சொன்னாயோ புத்திக்கெட்ட தன் பயலே நீ தெற்கே போகையிலே வடக்கேயும் போகிறண்டா வடக்குதிசை நோக்கி வகையாகச் சுற்றி வந்தான். நீ வடக்கேயும் போகையிலே மேற்கேயும் போறாண்டா. மேற்குத் திசைநோக்கி விழுந்தோடி தான் பார்த்து கண்ணிலேயும் காணாமல் கடோற்கசனும் வாரானாம்.

அப்போது வாள்வீமன் அடவாகத்தான் பார்த்து நீ மேற்கே மிகப் போகையிலே கிழக்கேயும் போறாண்டா. கிழக்கே மிகப்பார்த்து கிட்டவே வந்தானாம் தொண்டப் பயலே நீ சொன்னதெல்லாம் பொய் தாண்டா.

பயலென்று சொன்னதுக்குப் பல்லைப்பிடுங்குவண்டா. உன் மாமனைக் கொன்ற மதயானை நான்தாண்டா. பயலேன்று நானிருந்தேன் பழிகாரன் ஆனாயோ! உன்கையிலே ஆனமட்டும் ஒளியாமல பாருமடா கடோற்கசன் எழுந்திருந்து கண்கள் பொரி பறந்து நீலவிழிக்கண்கள் இரண்டும் நெருப்புத் தனல் ஆகிறது.

தின்னுமிஞ்சிதம்பலங்கள் தீக் கலந்து வேகிறது. நாகமரத்தைப் பார்த்து கடோற்கசனும் தான் அடித்தான் மரமும் அடியோடே வகையாய் விழுந்ததுவே இருவர் இரண்டு பேரும் எதிர்த்தார்கள். அப்போது பாணங்கள் போட்டார்கள். மலைகளும் மான் நடுங்க கல்லுகளும் தான் எடுத்துச் கடோற்கசனும் போட்டானே வாளாலபி மன்னன் மலையெடுத்துத்தான். போட்டான். எதிர்ப்பட்ட மலைகள் எல்லாம் இலவம் பஞ்சு ஆனதுவே கால்பட்ட மலைகள் எல்லாம் கடுகுபொடி ஆனதுவே. மலைகள் செடிகள் எல்லாம் மாயமாய்ப் போனதுவே.

இருவர் இரண்டுபேருக்கும் இரணகளம் ஆனதுவே. இவன் போடுகிற பாணம் அவன் காலில் பூவாய் விழுந்ததுவே. கடோற்கசனும் சக்கரத்தைக் கண்டிப்பாய் விட்டானாம். சக்கரமும் ஓடி வந்து தானாய்ப் பணிந்ததுவே. எம தண்டாயுதத்தை இரணகளமாக விட்டான். எம தண்டாயுதமும் இடம்புரி வலம்புரியாய்ச்

சுத்தி வந்து சுத்தி வந்து தென்டனிட்டு சுருக்காக வந்ததுவே. அந்தரத்துத் தேவர் எல்லாம் அதிசயமாயப் பார்த்து நிற்க வீமனுடன் போரோ. விசையனுடன் தான் போரோ.

ராமபத்திர சுவாமியுடன் நல்லதொரு தன் போரோ அருவடைய போரேன்று அளவறுப்போம். பூமியிலே மாயனுட போரோ மகாதேவர்தன் போரோ. தேவர்கள் பாத்திருக்க திறமாய்ப் பொருதுகிறார்கள். மண்டியிட்டுப் பொருதுகிறார்கள். வாளோடு வாள் முறிய தண்டியிட்டுப் பொருதுகிறார்கள். சனங்களெல்லாம் மதிக்க கட்டிப்பிரண்டு கடோற்கசனும் தான் விழுந்தான். கடோற்கசனும் எழுந்து இருந்து கடக்கவே போயிருந்து.

வாடா நீதம்பி உங்கள் வங்கிஷத்தைத் சொல்லும் என்றான். மலையிலே உண்டோ. மக்களிளுட தன்னுறவு சண்டையிலே உண்டோ தன்னுறவு ஒப்பாரி பின்னுக்குப் பேடா பிரட்டுவேன். உன் உயிரை அப்பக்கம் கடோற்கசனும் அடவாக ஏது சொன்னான். வேண்டாமடா தம்பி வியாக்கியங்கள் பேசாதே. நீ தானும் சொல்லாட்டி நான் சொல்லுகிறனே் கேளுமடா. அப்போது வாள்வீமன் அடவாக ஏது சொன்னான்.

என்னோடே சொல்லாதே மலையோடே சொல்லுமடா. அப்போ கடோற்கனும் அடவாகச்

சொல்கிறனே். மலையை மிகப்பார்த்து வங்கிஷத்தைச் சொன்னான். ஆரிய குல வங்கிஷமாம் சூரிய குல வங்கிஷமாம் பரிவாள சந்திரகுலம் பாண்டு புத்திரக் கூட்டமடா, தாரு புகழுடைய தருமருக்கு நேரிளையான் வெற்றிமத யானை வீமனுட புத்திரண்டா. கமலகன்னி மைந்தன் கடோற்கசனும் நான்தாண்டா.

உங்களுட வங்கிஷத்தை உத்தியாய்ச் சொல் என்றான். அந்த மொழிக்கேட்டு ஆனதொரு வாள்வீமன் தாரு புகழுடைய தருமருக்கு நேரினையான் வெற்றிமத யானை வீமனுக்கு நேரினையான். ஆளலாலழகன் அருச்சுனன் புத்திரண்டா மரியனுட தங்கை சுபத்திரையாள். என் தாயார் வாளுக்கு வல்ல வாள்வீமன் என் பேரு, அப்பக்கம் கடோற்கசனும் அடவாக ஓடி வந்து.

கடோற்கசனும் வந்து கட்டினான் கையார கட்டி அழுதார்கள். கானகங்கள் சிலையோட ஒக்கப்பிறக்க ஒரு கோடிநாள் செல்லுமே கூடப்பிறக்க கோடி நாள் செல்லுமே, தேடக்கிடையாதே தேடிய நாள் கிட்டாதே. வாள்வீமனைத் தானும் வகையாகக் கண் துடைத்து தம்பியரே தம்பியரே வாள்வீமா தனித்துவழி வந்தது என்ன.

அண்ணனைப் பார்த்து அடிதொழுது தெண்டனிட்டு வாளாலபிமன்னன் வகையாகச்

சொல்லுகிறான். துரியோதனன் பாவி திக்குக்கெட்ட பொடி மகன் மாயன்மகள் சுந்தரியை மாலையிடப் போறானென்று வல்லரக்கன் வனம் புகுந்து வந்தேனே. அண்ணாவே என்னைக் கண்டு மறித்து கடும் கோபம் உண்டாகி தின்கிறதே அல்லாமல் திரும்பிவிடப் போகிறது இல்லை என்று சொல்லி வல்லரக்கன் இந்தப்படி சொன்னதுக்கு.

ஆயுதத்தைத் தான் எடுத்து ஐவரையும் தான் நினைந்து வெட்டினேன் அண்ணாவே விழுந்தானே. வல்லரக்கன் அந்த மொழிக்கேட்டு ஆன கடோற்கசனும் தம்பியரே வாள்வீமா தாடாளா கேளும் இப்போ. அம்மானஞ் செத்தால் அதுக்கொன்றும் சேதம் இல்லை. ஆனதொரு தம்பியரே இருவர் இரண்டு பேருக்கும் இரணகளம் ஆச்சுதே.

வாடா நீ தம்பி என்று வல்லரக்கன் கிட்டவந்து வெட்டின முண்டத்தை விதமாகக் காட்டி வைத்து கடோற்கசன் கொண்டு வந்த கட்டுச்சோறு அத்தனையும் வாய்க்கரிசி என்று வைத்தார்கள் இவருமாய் கொள்ளியும் வைத்துக் குடம், உடைத்தார்கள். கட்டையும் போட்டுக் கானகத்தில் வெந்ததுவே. நல்லடக்கம் பண்ணி நடந்தார்கள் இருவருமாய். அந்த வனங்கடந்து அப்பாலே போகையிலே.

அரிண்ட வனங்கடந்து அயிராவதம் கடந்து பொன்னேரி தான்கடந்து பூந்தோட்டம் உள்புகுந்து பூந்தொட்டிக்கு உள்ளே புகழ்வீமனை வைத்து கமலக்கன்னி அரண்மனைக்கு கடோற்கசனும் வந்தானாம் ஆத்தாளைக் கண்டு, அடிவணங்கி தெண்டனிட்டு வாடா மகனேயென்று வகையாகத் தான் எடுத்து போனது ஒரு காரியங்கள் புத்திரனே தான் சொல்லும் என்றாள் அம்மானே அல்லாமல் ஐவருக்குச் சேதமில்லை.

வல்லரக்கன் வாயினால் மாண்டானே! இப்போதும் அண்ணனை வெட்டுகிற ஒரு ஆண்பிள்ளையும் உண்டோ தான் உன் மாமனை வெட்டுகிற மதயானை உண்டோ தான அதட்டி எழுந்திருந்தாள் கொம்பனையாள் கமலக்கன்னி நீலவிழிக் கண்கள் இரண்டும் நெருப்புத் தணலாகிறது, தின்னுமிஞ்சதம் பலங்கள் தீக்கலந்து வேகிறது அண்ணனைக் கொன்றவனை அவனை விடப் போகிறதில்லை.

என்று சொல்லிதானும் இருக்கிற வேளையிலே மாதாவே என்தாயே மனஞ்சலிக்க வேண்டாம். அய்யா, போகத்தை நீ அடக்கு கொன்றவனும் நான் தாண்டி அடித்தவரை அடியாதே ஆனதொரு என் காயே வைதவரை வைய்யாதே மாதாவே என் தாயே கேளுமடி என்தாயே கீர்த்தியுள்ள மாதாவே ஐவர் வனவாசம்

அடவாகப் போன பின்பு துரியோதனும் தென்னவர்கள் உள்ளதெல்லாம்.

மாயன்மகள் சுந்தரியை மாலையிடப் போறார்கள். அந்த நல்ல சேதி அபிமன்னன் தான் கேட்டு வல்லரக்கன் வனம் புகுந்து வந்தானாம். வாள்வீமன் அந்தநல்ல வேளையிலே அவனை வழி மறித்து தின்கிறதே அல்லாமல் திரும்பிவிடப் போறதில்லை என்று தான் சொன்னானாம் ஏற்றமுள்ள வல்லரக்கன் வல்லரக்கனோடே தம்பி பகையாகச் சொன்னானாம். பரிவான சந்திரகுலப் பாண்டு புத்திரர் கூட்டமடா.

தாரு புகழுடைய தருமருக்கு நேரினையான். வெற்றி மத யானை வீமனுக்கு நேரினையான். அருச்சுனன் குமாரன் ஆனதொரு வாள்வீமன் நான்தானும் தப்பி வந்தேன் தருமத்துக்கு விட்டுவிடு. என்னையும் பாராட்டி எங்கள் ஐவரையும் பாருமடா. அப்போது வல்லரக்கன் அடவாகச் சொன்னானாம் உங்கள் ஐயரையும் பார்த்தாலே கணபசி நீங்குமடா என்று தான் வல்லரக்கள் ஏடா கூடந்தானுஞ் சொல்லி.

என்னதான் சொல்லி இதமாய் உரைத்தாலும் உன் சீவனைக் கொன்று தின்பேண்டா வாள்வீமா அப்படி சொல்ல ஆனதொரு வாள்வீமன் ஐவரை நினைந்து ஆயுதம் தான் எடுத்தான். வல்லரக்கன் தானும் மலை

உருட்டி விட்டானாம். எதிர்ப்பட்ட மலைகள் எல்லாம் இலவம்பஞ்சானதுவே. பூமி நடுங்க போட்டானாம் கல்லெடுத்து அப்புறம் வாள்வீமன் அடவாகத் தானிருந்தான் மறித்தும் மலைபிடுங்கி வல்லரக்கன் போட்பானாம்.

அப்பவும் வாள்வீமன் அடவாகப் பார்த்திருந்து ஏட்டில் எழுத்தோ எழுதினவன் சொல்படியோ எண்ணாதும் எண்ணி எதிர்த்தானே வாள்வீமன் அப்போது வல்லரக்கன் மரம் பிடுங்கி எறிந்தானாம். வந்த மரத்தை எல்லாம் வாள்வீமன் தட்டிவிட்டு வாளவீமன் கொக்கரித்து வாள்வீமன் வீசிவிட்டான் வீச்சு மிகப்பட்டு வீழ்ந்தானே. வல்லரக்கன் தப்பிப்பிழைத்து வந்தது தருமமடி என் தாயே அப்பாமகனே என அருமைத்திருமேனி எங்கே.

பூந்தோட்டத்தில் வைத்து புறப்பட்டு வந்தேனே அப்போது கமலக்கன்னி அலறியே ஓடி வந்து பூந்தோட்டம் புகுந்து புத்திரனைத் தானெடுத்து வாரியெடுதது வரன் முகம் முத்தமிடு சேர்த்து எடுத்து திருமார்பை முத்தம் இட்டு உச்சிமுகந்து உள்ளங்காதல் முத்தமிட்டு தேடக் கிடையாது. தம்பியரைத் தேடினால் கிட்டாது. வருந்தக் கிடையாது வருந்தினால் கிட்டாது பூந்தோட்டத் விட்டு புறப்பட்டாள் கமலக்கன்னி. கமலக்கன்னி அரண்மனைக்கு

கடுகனவே வந்தாளாம். முந்தித் தவனத்துக்கு மோருத்தண்ணி தான் கொடுத்து சம்பங்கி எண்ணெய் கொண்டு தலைகோதி சிக்கறுத்து ஒவ்வோரு மயிருக்கு பூவிதழும், பொன்னிதழும் புஷ்பங்கள் தானும் போதவே தான் முடித்து காயும் கனியும் கடுகவே தான போட்டு போசனமும் பண்ண புனுகு சவ்வாது அணிந்து நல்ல நாள் கேட்டு நலங்கிட்டார் அம்மானை.

கங்கணமுங்கட்டி காப்பு தரித்தார்கள். தாலியும் கூரையும் தப்பாமல் தான் கொடுத்து வரிசை உடைமை எல்லாம் வகையாகத்தான் கொடுத்து நல்ல நாள் கேட்டு நாள் முகூர்த்தமிட்டார். கடோற்கசனை அழைத்து கமலக்கன்னி ஏது சொல்வாள் அப்பா மகனா அறிவுள்ள அபிமன்யு மாயன்மகள் சுந்தரியை மாலையிட்டு வாடா நீ ஆயன்மகள் சுந்தரியை மாலையிட்டு அன்பாக வாடாநீ.

பால் குடித்தது உண்டு படைமுகம் கண்டது இல்லை. ஈட்டி முகமறியான் எதிர்த்தப்படை வெல்லறியான். சந்திரனைக் கண்டது உண்டு சண்டை முகம் கண்டது இல்லை. பாலகனை விட்டால் பார்த்தவர்க்கு ஏற்காது. துரியோதனன் படையை சேரவே நீ துரத்தி கலியாண சோபனத்தைக் கண்ணான தம்பியர்க்கு கடுகவே நீ முடித்து கடோற்கசனே வாடா நீ வாழ்த்தி விடைக் கொடுத்து மந்திரவாள் கைக்கொடுத்து.

போற்றி விடைகொடுத்து போய் வாடா மகனே என்றாள். மக்கள் இருவரும் வகையாகத் தெண்டனிட்டு தெண்டனிட்ட புத்திரனே சீமானாய்ப் போய்வாடா. வடபத்திரகாளி வருவாள் துணையும் உண்டு. போவென்று சொல்லி புத்திரனை அனுப்பிவித்தாள். ஊரை விட்டுக் காத வழி ஒரு நொடியில் வந்தார்கள். ஆந்த வனங்கடந்து அப்புறத்தே போனார்கள். அரவானுட பக்கலுக்கு நல்லதொரு மாயவரும்.

பார்ப்பான் வடிவெடுத்து பஞ்சாங்கம் கைப்பிடித்து மாயன் வருகையிலே வண்மையுள்ள அரவானு ஒரு மலையில் இடம் வைத்து ஒரு மலையில் கால் நீட்டி அஞ்சம்பு தானெடுத்து அகலம்பு தீட்டுகிறான். அந்த நல்ல வேளையிலே ஆயனுங் கிட்ட வந்து காலையும் வாங்குமடா. கண்ணாளா அரவானே. அப்போது அரவானும் அடவாகச் சொல்லுவான். இன்னும் மிகச் சொன்னால் இழந்தாயடா உன் உயிரை.

பேசாமல் போனால் பிழைப்பாயடா பார்ப்பா நீ மாயனும் கண்டு வண்டத்தனம் ஆச்சுது என்று தம்பியடா அரவானே சண்டைக்கோ தீட்டுகிறாய். நீ தீட்டுகிற அம்பு செயிக்குமோ செயிக்காதோ. ஒரு சோதனைப் பார்க்க வேணும். துருசாய் எழுந்திரும். நல்லதென்று சொல்லி நகைத்தானே அரவானும். அப்பவே அரவானும்

அடவாகக் கால் வாங்கி எங்கேயடா போடவேணும் எனக்கறிய சொல்லமடா.

ஆலமரத்து இலையை ஒரு அம்பாலே போடவேணும். இலைக்கு அஞ்சுமுறாக இன்பமாய்ப் போடும் என்றான். அப்பவே அரவான் ஆண்டவனைத் தான் நினைந்து சிவனே என்று வில்வாங்கி சிங்காரமாய்ப் போட்டான். ஒரு அம்பு போட ஒன்பது நூறாயிரமாம் இலைக்கு அம்பு இயல்பாகப் பாய்ந்ததுவே. இலைக்கு அஞ்சு தமரும் இன்பமாய் ஆனதுவே. மாயனது கண்டு வகையாக ஏது சொன்னான்.

ஏதடா தம்பி ஒரு இலையை விட்டது தான் அய்யனே இப்போ அது கேட்டாயோ இல்லையோ. எங்களுட மாமன் ஆலிலை மேல் பள்ளிக் கொண்டான். அதுகண்டு ஒரு இலையை அடவாக விட்டு வந்தேன் என்று தான் சொன்னான். ஏற்றமுள்ள அரவானும் அப்பவே பார்ப்பான் அடவாகப் போனதுவே. வாள்வீமன் கடோற்கசனும் வாரான் வனந்தனிலே ஊசி வனங்கடந்து உருத்திராட்ச பூமிவிட்டு.

பாசிமலை கடந்து பருத்தமலை தான் கடந்து சிள்ளென்னுங்காடும் செடியும் வனாந்திரமும் நாகமலை தோகைமலை நடுவே ஒரு கொல்லைமலை கண்ணாடி மேலிருந்து கரடிமலை கால்நீட்டி பதினெட்டு நாளைப்

படைப்போர் வந்ததென்றால் அஞ்சம்பு தான் எடுத்து ஆன கம்பு தீட்டுகிறான். எந்தத் தடத்திலே ஆன கடோற்கசனும் தம்பியரும் இருவர் இரண்டு பேரும் இரு தடமாய் வந்தார்கள். யாருடா மலைமேலே அம்பு மிகத் தீட்டுறவன்.

கால் மிக வாங்கென்று கடோற்கசனும் சொன்னானாம் துரியோதனனும் தென்னவர்களுக்கு உள்ளதெல்லாம் மூன்று நாள் மட்டும் மூர்க்கமுள்ள சேவகரும் என் காலுக்கு கீழே போனார்கள். கனத்த படை மன்னரெல்லாம் உனக்கு நான் கால் வாங்க உன்னினேலயும் எளியவனே கால்வாங்கச் சொன்னதுக்கு கண்டதுண்டம் ஆக்குவண்டா. பேசாதே போடா நீ பேய் கொண்ட பயலே என்றான். பயல் என்று சொன்னதுக்கு உன் பல்லைப் பிடுங்குவேண்டா.

அமட்டி எழுந்திருந்தான் ஆன கடோற்கசனும் கரடிமலையைக் காலினால் தான் உதைத்தான். மலை இடிந்து விழுந்தது மகமேருவைப்போல கண்டே தான் அரவானும் கடுக குதித்து வந்து அலைக்கொட்டி தான் எடுத்து அயிராவதம் எடுத்து அஞ்சமலை எடுத்து அடவாக மேல் போட்டான். எதிர்ப்பட்ட மலைகள் எல்லாம் இலவம் பஞ்சாகுது. மறித்து மலை பிடுங்கி வகையாகப் போட்டானாம்.

கால்பட்ட மலைகள் எல்லாம் கடுகு பொடியானதுவே அப்போது அரவானும் அம்புதனை எடுத்து அக்கினி பாணம் அடவாக உச்சரித்துவிட்டான். வானத்துக்கும் பூமிக்கும் வருகிற பாணம் அது வாயுராசனை நினைந்து வகையாக உச்சரித்தான். அப்பவே அம்பு அடவாக வந்ததுவே. அக்கினி அம்பு அடவாக வருகையிலே வருனாஸ்திரம் தான் எடுத்து வகையாக உச்சரித்து மழையம்பு தன்னை வகையாக விட்டானாம்.

மழையம்பு போய் வகையாகச் சுற்றிக்கொண்டு அக்கினி அம்பை எல்லாம் அவிச்சுது அப்போது அரவானும் பார்த்து நாகப்பாசத்தை விட்டான். அப்போது கடோற்கசனும் அடவாகத் தான் பார்த்து கருடாஸ்திரம் எடுத்துப் பூட்டியே விட்டானாம். பாணம் எழும்பித்து மகரமேரு போலே தான் இருவர் இரண்டு பாணம் எதிர்த்துப் பொருதியதே.

அரவான் தான் விட்டது ஒரு நாகப் பாசாந்தானும் கருடனைக் கண்டு கீழ் விழுந்து போனதுவே. அப்போது அரவானும் அடவாகத்தான் பார்த்து சரபாணம் தான் எடுத்து தானாக உச்சரித்து போட்டானே பாணம் பூமி எல்லாம் தான் நடுங்க மண்ணதிர விண்ணதிர மரம் தான் படையதிர பாணம் வருகிறது. மலைகள் பத்தி வேகுகிறது. கடோற்கசனும் அப்போ கண்ணாரக் கண்டானாம்.

ஐவரையும் தான் நினைந்து அயிராவதம் எடுத்து எதிர்த்து மிகப்போட்டான். இயல்பாக அப்போது இரண்டு துண்டாக சரபாணம் ஆனதுவே இவன் போடுகிற பாணம் அவன் காலில் பூவாய் விழுந்ததுவே. அவன் போடுகிற பாணம் இவன் காலில் பூவாய் விழுந்ததுவே. அந்தரத்துத் தேவர் எல்லாம் அதிசயமாய்ப் பார்த்து நிற்க இந்த உலகில் இப்போர் கண்டதில்லை.

வாலியுடன் போரோ விசயனுடன் தன் போரோ வீமனுடன் போரோ மாயனுடன் தன் போரோ யாருடைய போரென்று அடவாகப் பார்த்திருந்தார். தேவர்கள் பார்த்து நிற்கத் திறமாகப் பொருதார்கள். அப்போது அரவானும் அடவாகக் கிட்டவந்து யாரடா தம்பி உங்கள் வங்கிஷத்தைச் சொல்லும் என்றான். மலையிலே உண்டோ மக்களுடன் தன் உறவு சண்டையிலே உண்டோ தன்னுடைய ஒப்பாரி.

ஏண்டா நீ இப்போ இடும்போதுதான் பேசுகிறாய். அப்போது அரவான் அடவாகச் சொன்னதுவே. நீ சொல்லாதே போனாலும் நானுந்தான் சொல்லுகிறேன். வங்கிஷத்தைச் சொல்லுகிறேன் வகையாகக் கேளும் என்றான். அப்போது அரவான் அடவாகச் சொன்னதுவே மலையே நீ கேளும் எங்கள் வங்கிஷத்தைச் சொல்லுகிறேன்.

ஆரிய குல வங்கிஷமாம் சூரியகுல வங்கிஷமாம் பரிவான சந்திரகுலம் பாண்டுபுத்திரர் கூட்டமடா. தாரா புகழுடைய தருமருக்கு நேரினையான். வெற்றிமதயானை வீமருக்கு நேரினையான் ஊரார் புகழுடைய உத்தபுகழ் அர்ச்சுனனார் அருச்சுனன் குமாரன் ஆனதொரு அரவாண்டா அப்பக் கடோற்கசனும் அடவாக ஓடிவந்து கட்டி அழுதார்கள். கானகங்கள் இலையோட.

கடோற்கசனும் வாள் வீமன் சுத்ததேர் அரவானும் மூவருங் கூடி அழுதார்கள். கானகத்தில் கூடிப்பிறக்கக் கோடிநாள் செல்லுமே. சேரப்பிறக்கச் சேனநாள் செல்லுமே. தேடக்கிடையாது தேடியநாள் கிட்டாது வருந்தக் கிடையாது வருந்திய நாள் கிட்டாது. அழுது புலம்பி ஐவர் பெற்ற புத்திரரும் தம்பியரே கண்ணாளா தாராளா எங்கே வந்தாய்.

அப்போது மம்பியரும் அடிபணிந்து தெண்டவிட்டு தெண்டவிட்ட தம்பியரைத் திக்கென்று தானெடுத்து தம்பியரே தாடாளா தனித்து வழிவந்ததென்ன. அப்போது கடோற்கசனும் அடவாக ஏது சொன்னான். மாயன்மகள் சுந்தரியை தம்பியர்க்கு மாலையிட வந்தேன் அய்யா. அந்த மொழிகேட்டு ஆனதொரு அரவானும் துரியோதனன் படையும் தென்னவர்கள் உள்ளதெல்லாம் என் காலுக்கு கீழே போனார்கர்ள. கனத்த படை மன்னரெல்லாம்.

சேதி அறிந்தால் அவர்கள் சீவகனை சங்கரிப்போன். ஆகட்டும் தம்பியரே இனி யாரு தப்பப் போகிறார்கள் என்று சொல்லித்தானும் ஏத்தமுள்ள அரவானும் நாகக்கன்னி அரண்மனைக்கு நடந்தார்கள் மூவருமாய் அந்த வனங்கடந்து அயிராவதம் கடந்து மூங்கில் வனங்கடந்து முன்னூற்றின் காதவழி நாகக்கன்னி அரண்மனைக்கு நன்றாய் நடந்தார்கள். அப்போது நாகக்கன்னி அடவாய்க் கொழுவிருந்தாள்.

மூவரும் வந்து முன்னாகத் தெண்டனிட்டார். தெண்டனிட்டப் புத்திரனைத் திக்கென்று தானெடுத்து அப்பா மகனே இவர்கள் யாரடா சொல்லும் என்றாள். என்தாயே நாககன்னி ஏற்றமுள்ள தாயாரே. கபோற்கசனும் வாள்வீமன் கருந்தாளி உன் புத்திரன்டி அலறி எழுந்திருந்து ஆனதொரு நாககன்னி மங்கை மணவாளா வரிசையுள்ள புத்திரரே சேர்ந்து எடுத்து தென்னவர்கள் மெச்சிடவே.

கட்டிக்கரும்பே என்று கண்ணார முத்தமிட்டு என் கவலை தீர்க்க வந்த எனக்கேற்ற புத்திரனே தம்பியரே நீங்கள் தனித்து வழிவந்ததென்ன அந்த மொழிக்கேட்டு ஆனதொரு அரவானும் மாயன்மகள் சுந்தரியை மாலையிட வந்தார்கள். நல்லதென்று சொல்லி நாகக்கன்னி அம்மாளும் சம்பங்கி எண்ணெய்க் கொண்டு

தலைக்கோதி சிக்கறுக்கு போசனமும் பண்ணி புனுகு சவ்வாது அணிந்து.

நல்ல நாள் கேட்டு நலங்கிட்டார். அம்மானை கங்கணமும் கட்டி காப்புத் தரித்தார்கள். அரவான் தனை அழைத்து நல்லதொரு நாகக்கன்னி தம்பியர் எவரும் தனித்து வழிபோனதில்லை. பாலுக்குடித்ததுண்டு படைமுகமும் கண்டதில்லை. ஈட்டிமுகம் அறியான் எதிர்த்தவரை வெல்ல அறியான். கத்தி பிடித்ததுண்டு கனத்த சண்டை கண்டதில்லை. சங்குதுவாரகாபுரிக்கு தாடாளா நீ போய்.

கலியாணவாசலுக்கு கருத்தாகப் போயிருந்து கலியாண முகூர்த்தம் கருத்தாகத் தான் முடித்து யாரொருவர் வந்தாலும் அஞ்சாதே என் மகனே சேனை படை வந்தாலும் சேரவே நீ எதிர்த்து கலியாண காரியம் கைநழுவப் பாராதே. வாழ்த்தி விடைகொடுத்து மந்திரவாள் கைகொடுத்து போற்றி விடைகொடுத்து போடாமகனே என்றாள். பக்கம் துணையாக பத்திரகாளி தான் வருவாள்.

கூடத்துணை வருவார் குழந்தை வேலாயுதரும் ஐவர் துணையும் உண்டு அஞ்சாதே போடா நீ என்று தான் சொன்னாள். ஏத்தமுள்ள நாகக்கன்னி அந்த மொழிக்கேட்டு ஆனதொரு அரவானும் கடோற்கசனும்

அரவானும் கண்ணான வாள்வீமனும் மூவருங்கூடி மூன்று தரம் சுற்றிவந்து மூன்று தரம் தெண்டனிட்டு தெண்டனிட்ட புத்திரனைத் திக்கென்று தானெடுத்து இன்னும் பதம் பெறுவீர் இளைய பதம் உண்பாவீர்.

பின்னைப்பதம் பெறுவீர் பெருமாள் துணையும் உண்டு. தாலியும் கூரையும் தப்பாமல் கைகொடுத்து வரிசை உடைமைகளும் வகையாகத் தான்கொடுத்து கலியாணம் தம்பிக்குக் கடுக முடித்து வாடா. நல்லதென்று மக்களை நாகக்கன்னி பயணம் பண்ணி போடா மகனே என்று போற்றி விடை கொடுத்தாள். விடை வாங்கிக் கொண்டு வெளிப்பட்டார் அப்போது.

ஊருகடந்து உருத்திராட்ச பூமிவிட்டு, நாடு கடந்து நாகமலை தான் கடந்து மூங்கில் வனங்கடந்து முன்னூற்றின் காதவழி காடு கடந்து கரடிமலை தான் கடந்து நாகைமலை தோகைமலை நடுவே ஒரு செயமலை நாலு மலைக்குள்ளே நடுச்சந்து தடமுங்கட்டி காய்திரக் கொடி வேந்தன் சகாதேவன் புத்திரனும் தொந்திந செட்டி தானும் தூக்கி வெள்ளிக் கோலாலே நிறுத்து நிறை காண்பான் நீதி உள்ள தொந்தி செட்டி.

மூவரும் போய் முன்னாக நின்றார்காள். சகாதேவன் புத்திரனும் தப்பாமல் தான் பார்த்து எங்கேயடா போகிறீர்கள் எனக்கறியச் சொல்லும் என்றான். தூரவட

தேசம் தொலை தூரம் போறோம் என்றான். தடத்தையும் விட்டு தப்பாமல் நில்லமடா என்னடா நீயும் எண்ணாமல் சொன்னது தான்.

துரியோதனன் படையும்
தென்னவர்கள் உள்ளதெல்லாம்

நிறுத்து வருகிறவன் நீ சொன்னால் விலகுவனோ நிறுத்தி விடுகிறண்டா நில்லடா பயலே என்றான். பயலென்று சொன்னதுக்கு பாரடா உன் சமத்தை ஒன்றுக்கு ஒன்று ஓரசு வந்து சேர்ந்ததுவே.

வெள்ளிக்கோல் தடியாலே வீசினான். அப்போது மூன்று பேரையும் காற்று முக்காதங் கொண்டு போனதுவே. திரும்பியே ஓடிவந்து தீயாய் எரித்தார்கள் என்று சொல்லித்தானும் எதிர் வாதத்தை சொன்னானாம்.

கடோற்கசன் அரவானும் கடுங்கோபம் உண்டாகி யாரடா தம்பி உங்கள் வங்கிஷத்தைச் சொல்லுமடா. யாராடா கேட்கிறவன் அஞ்சாமல் நீதானும் அப்போ கபோற்கசன் அடவாக ஏது சொன்னான். இடம் கேடு பேசாதே எனக்கு அறியச் சொல்லுமடா. அப்போது தொந்தி செட்டி அடவாக ஏது சொன்னான். பரிவான சந்திரகுலம் பாண்டுபுத்திரர் கூட்டமடா.

தாராபுகழுடைய தருமருக்கு நேரினையாள். வெற்றி மதயானை வீமருக்கு நேரிளையான். நல்ல பரி நடத்தும்

நகுலனுக்கு நேரிளையான். சாய்திரக் கொடி வேந்தன் சகாதேவன் புத்திரண்டா. அப்போது அரவானும் அடவாகக் கிட்டவந்து கட்டி அழுதார்கர்ள. கானகங்கள் சிலையோட தேடக் கிடையோதே. தேடிய நாள் கிட்டாதே. வருந்தக்கிடையாதே. வருந்தியநாள் கிட்டாதே.

கட்டியழுது கண்கள் முகம் முத்தமிட்டு நாலு பேரும் கூடி நடந்தார்கள். அப்போது தில்லை வனம் கடந்து திருவேலங்காடுவிட்டு சிள்ளென்னுங் காடும் செடியும் வனாந்திரமும் காடு கடந்து கானகங்கள் தான் கடந்து வீரதங்காள் அரண்மனைக்கு விருசாக வந்தார்கள். நாலுபேரும் வந்து நலமாகத் தெண்டனிட்டு தெண்டனிட்ட புத்திரரை திக்கென்று தானெடுத்து.

யாரடா தம்பி அடையாளம் சொல்லும் என்றாள். அப்போது தொந்தி செட்டி அடவாக ஏது சொன்னான். என் தாயே மாதாவே இனிக்கேளும் என் வார்த்தை அருச்சுனன் புத்திரன் ஆனதொரு அரவாண்டி விசையனுட புத்திரன் மேலான வாள்வீமன் வீமனுட புத்திரன் மேலான கடோற்கசனும் அந்த மொழிக்கேட்டு ஆனதொரு வீரதங்காள் வாரி எடுத்து வர்ணமுக முத்தமிட்டு சேர்த்து எடுத்து திரு மார்பை முத்தமிட்டு.

தேடுந்திரவியமே திரவியமே எங்கே வந்தீர். வந்ததொரு காரியத்தை வகையாகச் சொல்லுகிறேன். நல்ல

முடிவு அரவானும் நலமாகச் சொன்னானாம். ஆத்தாளே வீரதங்கள் ஆனதொரு தாயாரே. மாயன்மகள் சுந்தரியை மாலையிடப் போறேனம்மா. அந்த மொழிக்கேட்டு ஆனதொரு வீரத்தங்காகள் போசனமும் பண்ணி புனுகு சவ்வாது அணிந்து போவென்று சொல்லி போற்றி விடை கொடுத்தான். தன்னுடைய மகனை தானே பயணம் பண்ணி போடா மகனே என்று போற்றி விடை கொடுத்தாள். விடை வாங்கிக்கொண்டு விருசாக வந்தார்கள். ஊருகடந்து உருத்திராட்ச பூமிவிட்டு காடுகடந்து கரடிமலை தான் கடந்து நாடு கடந்து நல்ல துற்கம் தான் கடந்து சங்குதுவாராகாபுரிக்கு வந்தார் நாலுபேரும்.

ஐவருட புத்திரரும் அன்பாக வந்தப்பின்பு பூங்காவனத்திலே போட்டார்க்ள. கூடாரம் மாயானது கண்டு வகையாகத் தான் பார்த்து மருமக்கள் வந்ததை வகையாய் அறிந்துகொண்டு தன்னுடைய மனது தானே தான் பூரித்து இப்படி தானும் இருக்கிற வேளையிலே துரியோதனன் படையும் தென்னவர்கள் தானும் கண்டு ஏதடா கூடாராம் எதிரொளி வந்தானோ.

என்று பயந்து இருக்கிற வேளையிலே மாயன் பெருமாளும் வகையாகக் கிட்டவந்து துரியோதனன் படையை திக்கனெவே தான் பார்த்து எதுக்கும் அஞ்சாதே

இனிக்கேளும் என் வார்த்தை நாகரசக் கூடாரம் நமக்காக வந்தது என்றார்ன. கலியாண வாசலுக்கு காரியமாய் வந்தார்கள். அதுகண்டு உங்களுக்கு அலுவல் இல்லை விட்டுவிடு. கலியாண சோபனத்தைக் கடுகவே சோடியுங்கள்.

காவலும் பத்திரமாய் கட்டாக நில்லுங்கோள் என்று சொல்லிப்போட்டு இயல்பான மாயவரும் மருமக்கள் தனக்கு வகையாக அப்பொழுது போசனம் பொறிகறியும் பேழையிலே தானும் வைத்து ஆயிரம் பேழையிலே அடவாய் அனுப்பி வைத்தார். வரிசைக் கொண்டு போறோம் என்று வந்தாரே அப்போது பேழையைக் கண்டு பிரியமுடன் அப்போது பேழை வந்தபோது பெண்ணும் வந்தது என்றார்கள்.

என்று சொல்லித்தானும் இருக்கிற வேலையிலே வாளாலபி மன்னன் வகையாக ஓடிவந்து ஆண்டிச்சி வீட்டிலே அடவாக வந்து இறங்கி மாயன்மகள் சுந்தரிக்கு மாலையும் கட்டயிலே அந்த நல்ல மாலையை அடவாகத் தான் வாங்கி கணையாழி மோதிரத்தை வைத்து கட்டினான் மாலையிலே. பூவிலே வைத்துக் கட்டினான் மோதிரத்தை. அப்போது மாயவரும் அடவாக எழுந்திருந்து.

சுந்தரியாள் அரண்மனைக்கு துருசாக ஓடிவந்து என் தாயே சுந்தரியே என் வார்த்தை கேளுமம்மா. கலியாணம் பண்ணவேணும் கடுகவே வாடியம்மா. செல்வக்கலியாணம் சிறப்புடனே பண்ணுகிறேன். அருமைக் கலியாணம் அருமையாய்ப் பண்ணுகிறேன். அப்போது சுந்தரியாள் அடைத்துத் தாள் பூட்டினாள். முத்தான கண்ணீரை முலைமார்பில் சோரவிட்டாள். பவளம் போல் கண்ணீரை பக்கமே சோரவிட்டாள்.

அத்தைமகன் இருக்க அசல் நாட்டான் வாரதென்ன மாமி மகன் இருக்க மற்றொருவன் வாரதென்ன. நாயேறு மடியில் நான் நாயகமும் ஏறுவேனே. பேயேறு மடியிலே பெண் பெருமாள் ஏறுவேனே. தன்னுட அரண்மனையில் அக்கினியை தான் வளர்த்தி அக்கினியில் விழுக ஆக்கரித்து நிற்கையிலே வீரசடை போட்டு வெளிப்பட்டு நிற்கையிலே ஆண்டிச்சி மாலை அடவாகக் கொண்டு வந்தேன். சுந்தரியாள் அரண்மனைக்கு சுருக்காக கொண்டு வந்தாள்.

ஆத்தாளே தாயே அபிஷேகப் பத்தினியே பூமாலை வந்தால் புருஷன் வந்தான் என்பார்கள். அப்போது சுந்தரியாள் அடவாகத்தான் கேட்டு பூவை முடிக்கப் புண்ணியங்கள் பெற்றேனோ. என்னைப் போல் பாவி இவ்வுலகில் உண்டோதான். அக்கினியை வளர்த்தி

அனலாகப் போறேன்டி. ஆத்தாளே சுந்தரியே அடவாகச் சொல்லுகிறேன்.

மாலை புருஷன் என்று வையகத்தில் கொல்வார்கள். புருஷனோடு ஒக்கும் பூவையும் வாங்குமம்மா. அப்போது சுந்தரியாள் அடவாக ஏது சொல்வாள். தாதிகளைத் தான் அழைத்து தயவாக வாங்கும் என்றாள். பூவையும் வாங்கி பொற்கொடியாள் முன்னே வைத்தாள். அப்போது பூவை ஆனதொரு சுந்தரியாள் பூவையும் வாங்கி பொற்கொடியாள் கண்ணில் வைத்தாள். கணையாழி அழுந்தினது கண்டாளே சுந்தரியாள்.

பூரித்துக் கொக்கரித்துப் பிரியமுடன் எழுந்திருந்து கணையாழி வந்ததே என் கணவன் வந்தான் என்றாளே. தலைவாசல் தான் திறந்து தகப்பனுக்கு ஆளும் விட்டு அப்போது மாயன் அடவாக வந்தாரே. மாயன் பெருமாளே மனதின் படி ஆச்சுது. வீதி சுத்தி நானும் வெளிப்பட்டு வாரானய்யா. மணவரை சோடித்து மாப்பிள்ளையை அழையும் இப்போ. அந்த மொழிக்கேட்டு அடவாக ஓடிவந்து.

வீதி சுத்தி தானும் வெளிப்பட்டு சுந்தரியாள் துரியோதனன் பெருமாள் தென்னவர்களை உள்ளதெல்லாம் கலியாண வாசலிலே கடுகவே வந்தார்காள். வந்து இருந்து மணவரையைச் சோடித்தார்.

பவளக்கால் ஊணி பக்கம் வளை பரப்பி தென்னை மரம் பிளந்து சிங்காரம் தான் எழுதி வன்னமரம் பிளந்து வகையான சித்திரமும் அன்னம் எழுதி அதன் மேல் கிளி எழுதி வர்ணமெழுதி மயிலெழுதி குயிலெழுதி.

அம்மி வலமாக அரசாணி முன்னே வைத்து பிரம்பு முதலாக பேய்க்கரும்பு முன்னே வைத்து காலும் கரகமும் தண்ணீரும் முன்னே வைத்து பட்டாலும் மேல் கட்டு பக்கமே தொங்கவிட்டு மணவரைப் பந்தலிலே மாணிக்கம் தான் பதித்து காலுக்குக் கால் கண்ணாடி கட்டி வைத்து.

தூணுக்குத் தூண் தூண்டா விளக்கெரிய தூணுக்குத் தூண் துவண்டாடும் சித்திரங்கள் தூணுக்குத் தூண் துடர்மாலை பொன்மாலை பூமாலை பொன்மாலை போத அலங்கரித்து கோத்த முத்துச்சரம் தூக்கி கொடுமுத்தை மண்பரப்பி மணவரை சோடித்தார். மண்டலங்கள் மெச்சிடவே லக்குணனைத் தானழைத்து நன்றாய் அலங்கரித்து தங்கத் தகட்டாலே சிரம் தெரியாமல்.

சோடித்து அப்போ சோபனங்கள் பண்ணவென்று லக்குண குமாரனுக்கும் நல்லதொரு சுந்தரிக்கும் பங்குனிமாதம் பதினைந்தாம் தேதியிலே வெள்ளிக்கிழமை விசய தசமியிலே கலியாணம் என்று கனக்க முரசறையும் என்றார். கலியாணம் கலியாணம் காரிகைக்கே கலியாணம்.

கலியாண வாசலிலே கண்ணரும் தானிருந்தார். இந்தப் படியாக இருக்கிற வேளையிலே.

முரசு ஓசைக்கேட்டு மோசமே வந்ததென்று நல்லதென்று சொல்லி அரவான் எழுந்திருந்து தம்பியரைத் தான் அழைத்து தலைவர்கள் பத்திரங்காண் இடையனென்று வேஷம் இதமாக பண்ணிக்கொண்டு நாமத்தைக் குழைத்து நன்றாய் அரவானும் மாயன் துணை எனவே மனதில் மிக நினைந்து நெற்றிக்கு மூணுப்பட்டை நெடுகவே போட்டானாம். தோளுக்கு நாலுப்பட்டை சுருக்காகப் போட்டானாம்.

முழங்காலுக்கு நாலுப்பட்டை
மூர்க்கமாய்ப் போட்டானாம்

கண்ணுகள் இரண்டும் கரடிமலை போலே உதடுகள் இரண்டும் ஏரிக்கரை போலே பாச்சான பால் பிடித்து பத்து மிடாவிலே எருக்கம் பால்கறந்து எட்டு மிடாவிலே கள்ளிப்பால் கூடக் காவாடியாய்க் கட்டிக்கொண்டு ஒன்பது கலசமாய் ஒருகாவடியாய்.

கட்டிக்கொண்டு
கிழக்குத்தலை வாசலிலே
கடோற்கசனைக் காவல் வைத்து.

தெற்குத் தலைவாசலிலே வாள்வீமனைக் காவல் வைத்து மேற்குத் தலைவாசலிலே தொந்தி செட்டியை

காவல்வைத்து வடக்குத் தலைவாசலிலே வாரானாம் அரவானும். தலைவாசல்காரன் கண்டு தடுத்தானே. அப்போ மாயளன்பெருமாள் மணப்பொங்கல் காவடி அப்பணை இல்லாமல் அரண்மனைக்கு விடுவதில்லை. அப்பணைக் கேட்க ஆளும் மிக வந்தார்கள். துரியோதனனை தெண்டனிட்டு ஏது சொன்னான்.

இடையனைப்போல் வாசலிலே இப்பவே வந்து நின்று மணப்பொங்கல் வாலுவரிசை கொண்டு போறோம் என்றார்ன. அதுகண்டு வந்தேன் அப்பனையோ ஆண்டவனே தலைவாசலுக்கு அப்பாலே தள்ளிவிடச் சொன்னானாம். அப்போது துரோணாசாரி அடவாக ஏது சொன்னான். ஒருவன் தான் வந்தால் உலகம் அழியுமோ. விட்டுவிடு வேணும் என்று விடைக்கொடுத்தார் அம்மானை. விடை வாங்கிக்கொண்டு வீதியில் வருகையிலே.

இரும்புத்தலைவாசல் இடித்து விழுக்காட்டி கொண்டு வந்த பாலை கோபமாய் இறைத்து விட்டான். காவடியைத் தானும் படைத்து கடுகவே வாரானாம். கண்ணிலே பட்டு கன கொப்பளம் ஆச்சுதப்போ. மாயன் பெருமாளும் வகையாய் எதிர்க்க வந்தார். அரவானும் மாயவரை நன்றாகத் தெண்டனிட்டான். அப்பவே மாயன் கண்டு அனர்த்தமே வந்தது என்று வந்த இடையனுக்கு வரிசை கொடுங்கள் என்றான்.

அந்தப்படிக்கு ஒரு பச்சைவடம் கொடுத்தார்கள். சீலையை வாங்கித் திரியாகத்தான் கிழித்தான். இருந்தவர்கள் எல்லாம் இடைப்புத்தி போகாதென்று அடைக்காயும் வெள்ளிலையும் அன்பாகத்தான் கொடுத்து போடா நீ தம்பி என்று பிரியமுடன் சொன்னார்கள். கலியாண வாசலுக்கு கடுக வந்தான் அரவானும் கண்டாளே சுந்தரியாள் கண்ணான அரவானை மச்சாண்டார் வந்தார் என்று மறைவில் ஒதுங்கி நின்றாள்.

அப்போது அரவானும் ஆனதொரு சுந்தரியை இனிமேலும் யோசனையை எண்ணாதே. விட்டுவிடும் என்று சொல்லி சுண்ணாம்பு எடுத்தான். மலைப்போலே. மலைப்போலே தானெடுத்து வாயிலே தான் போட்டு வாயில் குதப்பி வகையாகத் துப்பிவிட்டான். பதினாயிரம் பேர் கண்ணிலேயே பாங்காய் விழுந்ததுவே. ஐயோ என்ற சத்தம் அரவங்கள் ஆனதுவே. கோவென்ற சத்தம் கோட்டை எல்லாம் ஆனதுவே.

அப்போது அரவானும் அடித்தானாம். கோபம் கொண்டு கண்டு மிரண்டார்கள் கனத்தபடை சேனை எல்லாம் கிழக்குத் தலைவாசலிலே ஓடியே வந்தார்கள். கற்போற்கசன் அடிக்கிறது கண்ணும் விண்ணும் கொள்ளாது. வடக்குத் தலை வாசலிலே வாள்வீமன் வெட்டுகிறான். தெற்குத் தலை வாசலிலே தொந்தி செட்டி

அடிக்கிறான். வாள் எடுத்துக் கச்சைக்கட்டி வாள் வீமன் அடிக்கிறான். யானைத் தோலாலே அடிக்கிறான் கடோற்கசனும்.

வெள்ளிக்கோல் தடியாலே வீசுகிறான். தொந்தி செட்டி நல்லமுடி அரவானும் நாலு திக்கும் வீசுகிறான். துரியோதனன் படையும் திக்குகெட்டு ஓடுதே. கலியாணமென்று வந்தோம் கல்லெடுப்பு ஆச்சுதே மாயன் பெருமாளும் மாயமாய்ப் போனதுவே. துரியோதனன் பெருமாள் தென்னவர்கள் உள்ளதெல்லாம் கூடாரம் போட்டாப்போல் கொடிடால் நட்டாப்போல் யானைபடை சேனை எல்லாம் அடவாக விட்டுவிட்டு.

குதிரைபடை சேனை எல்லாம் கூடவே விட்டுவிட்டு மன்னர் துரை மக்கள் வகையாய் ஒளிந்தார்கள். அழிஞ்சில் புதையிலே அடவாய் ஒளிந்தார்கள். ஓணான் புதையிலே ஓடி ஒளிந்தார்கள் நொச்சிப் புதையிலே ஓடி ஒளிந்தார்கள். வந்தப் படைகள் எல்லாம் வகையாய் மடிந்தார்கள். தட்டுக்கெட்டுப் போய் தலைக்கெட்ட நூலது போல் கலியாணம் என்று வந்தோம் கனமோசம் வந்தது.

திக்குகெட்டு ஓடி திசைமாறிப் போனார்கள். அய்யோ சிவனே என்று அழுவார் ஒரு கோடி. காயம்பட்ட பேர்கள் கணக்கு வழக்கும் இல்லை. கொள்ளை கொடுத்தவர்கள் கோடி மன்னர் தானும் நிற்க

இந்தப்படியாக இறக்கடித்தான் அரவானும் கடோற்கசனும் அரவானும் கடுகவே ஓடிவந்து லக்குண குமாரனை நன்றாகக் கண்டார்கள். களறு வழியிலே கட்டாளாய்த்தான் பிடித்து.

பின் கட்டாயம் கட்டி தம்பி கையிலே கொடுத்து அழிஞ்சில் புதையை அடவாகத்தான் பார்த்து ஓணாம் புதையை ஓடி மிகப் பார்த்து நொச்சிப் புதையை நொடியிலே போய் வளைந்து செடிகள் வனங்கள் எல்லாம் தேடி மிகப் பார்த்து ஓணான் கொடிப்பிடுங்கி ஒன்பது தாம்பு கட்டி அரச மக்கள் ராசாவை ஐம்பது தாம்பு கட்டி படைத்தலைவர் மன்னவரை பதினைந்து தாம்பு கட்டி.

வீசினான் சுத்தோடு விருசாம் நடந்தார்கள். சங்கு துவாரகாபுரிக்கு தள்ளியே வந்தார்கள். மணவரைப் பந்தலுக்கு வகையாக வந்தார்கள். காலுக்கு ஒருவனுமாய்க் கட்டினார். அப்போது தொண்ணூற்று ஒன்பது பேரையும் தூணோடே கட்டினார். படைத்தலைவர் மன்னவரைப் பாங்காய் வரிந்துக்கட்டி அரசர் மக்கள் ராசாவை அடவாய் வரிந்துக்கட்டி அவர்கள் தகப்பமார் பார்த்திருக்க தானாக ஓடிவந்து.

நல்லதொரு நாவிதனை நலமாகக் கூட்டிவந்து லக்குணன் தலையை நலமாக அப்போது சிறு நீர்விட்டு சிறப்புடனே அப்போது அஞ்சுகவறாக அடவாய்ச்

சிறப்பித்து வண்ணான் சிறு குதிரை வகையாகக் கொண்டு வந்து ஆட்டுத்தோல் கல்லணையாய் அடவாக மேல்போட்டு அழிஞ்சிக்கோல் முறித்து அங்குவடி கட்டிவைத்து கட்டைக் கொடியை கடிவாளம் கைக்கொடுத்து.

பீத்தமுறம் ஆலவட்டம் பிடிக்கவே சொன்னார்கள். எருக்கம் பூமாலை ஏகமாய்ப் போட்டார்கள். வெண்சாமரம் என்று விளக்குமாறு வீசினார். பட்டணம் சுத்தி பாங்குடனே வந்தப்பின்பு நாய்ப்பீ கலக்கி நல்லதொரு தாதியரும் ஆலாத்தி சுத்தி அடவாக லக்குணன்கு அரசாணி கிட்ட அடவாகக் கூட்டி வந்து அத்தி முளைக்கொண்டு அஞ்சு முளை அடித்து.

காலுக்கு கொண்டு முளை கைக்கு இரண்டு அடித்து பின்னால் ஒரு முளை அடித்து பேசாமல் வரிந்துக்கட்டி அவன் தலையில் காணி அடவாய் உருட்டி வைத்து ஆயிரப் பெருந்தாளி அவன் தலையில் வைத்தார்கள். தோளுக்கு இரண்டு விளக்கு கோடாக வைத்தார்கள். கைக்கு இரண்டு தீவட்டி கடுகவே கட்டி வைத்து அப்போது தம்பியர்க்கு அருமைக்கலியாணம் முடிக்க வேணும். பருப்பில்லாக் கலியாணம் பார்த்தவர்க்கு ஏறாது.

எண்ணெயில்லா தீவட்டி எரியாது வையகத்தே மாயன் இல்லாக் கலியாணம் வையகத்துக்கு ஏறாது.

மாயனைப் பார்த்து வகையாகக் கொண்டு வாரேன். தம்பி கடோற்கசனே தாடாளா எச்சரிக்கை என்று சொல்லி அரவான் இதமாக வாரானாம். மலைகள் செடிகள் எல்லாம் வகையாகத்தான் பார்த்து ராச்சியத்தை சுற்றி மிகப் பார்த்து வனங்கள் திரிந்து வகையாகத்தான் பார்த்து.

மாயனைக் காணாமல் மதிமயங்கி வாரானாம். ஏரி கரையிலே எதிர்க்க வருகையிலே. ஏரிக்கும் கீழே இளஞ்சுள்ளியாய் முளைத்தார். நாராயணன் சுள்ளியாய் நன்றாகத்தான் வளர்ந்தார். சுள்ளிச் செடியைக் கண்டு சுற்றமிக ஓடிவந்து மாயன் பெருமாளே மண்ணில் ஒளிவது உண்டோ. சுள்ளிச் செடியை சுத்தி வந்து தெண்டனிட்டு கண்டான் அரவான் என்று கடுகவே ஓடிவந்து.

தவளை என்று வடிவெடுத்து தண்ணீரிலே பேர்ய் விழுந்தார். அப்போது அரவான் அடவாய் வடிவெடுத்தான். முதலை என்று வடிவெடுத்து முக்காலும் போய்த் துடர்ந்தார். அப்போது மாயன் அடவாக ஏது செய்தார். ஆமை என்று வடிவெடுத்து அடவாகப் போறாராம். அப்போது அரவான் அடவாக ஏது செய்தான். குறவனென்று வேஷங் கொண்டு குத்தினான். குத்துக்கோயில் அப்பவே மாயன் ஆகாசமாய்ப் பறந்தான்.

அப்ப அரவானும் அடவாக ஏது செய்தான். ராசாளியாக நன்றாகவே தொடர்ந்தான். அப்போது

மாயன் அடவாக எலி ஆனான். எலி என்று வேஷம் கொண்டு இறங்கியே ஓடலுற்றான். அப்போது அரவான் அடவாக ஏது செய்தான். பூனையென்று வடிவு எடுத்து பிடரிதனைப் பிடித்தான். மெச்சினேன் மருமகனே. விட்டுவிடு சொல்லுகிறேன். உங்களுட பெண்ணை ஒருவனுக்குக் கொடுப்பேனோ.

நீங்களும் வரவில்லை என்று வழிபார்த்திருந்தேனே. அரவானே நீயும் நான் சொல்லக் கேளும் இப்போ. துரியோதனன் பார்த்திருக்க தென்னவர்கள் முன்னாக கட்டிக்கொண்டு போடாநீ கனத்ததோர் அரவானே. கம்பளிக் கயறெடுத்து கட்டினான் மாயவனை. கட்டியிருக்கி காலோடே வீசிவிட்டான். கட்டிக்கொண்ட அரவானும் கோபமாய் வாரானாம் மாயனை அடிக்கிறது மன்னவர்கள் கண்டாரே.

நன்மை என்ற போதே நறுக்குவான் தப்பாமல் என்று துரியோதனன் ஓங்கி இடி விழுந்தான். அந்த நல்ல வேளையிலே அடித்து மிகக் கூட்டி வந்தான். கலியாண வாசலிலே கட்டானாய் நின்றதுவே. கட்டை அவிழ்த்துவிடும் கலியாணம் பண்ணுகிறேன். அப்படியே கட்டவிழ்த்து ஆயனை விட்டார்கள். மாயன் பெருமாளும் மணவரையில் நிற்கையிலே அரவான் கடோற்கசனும் நல்லதொரு வாள்வீமன்.

மூவரும் கூடி முக்கியமாய் எழுந்திருந்து கலியாண வாசலிலே களப்பெலி கொடுக்க வேணும் அலைக்கொட்டி வந்தார். ஐவர் பெற்ற பாலகரும் அப்போது மாயன் அடவாகச் சொன்னதுவே தம்பியரே அரவானே என் பேச்சுத் தட்டாதே. கலியாண வாசலிலே கலக்கம்மிக வேண்டாம். கலியாணம் முடியும் மட்டும் கலக்கங்கள் பண்ணாதே. மாயன் எழுந்து இருந்து வலம்புரிச்சங்கு பிடித்தான்.

ஐம்பத்தாறு மண்டலமும் அடவாகக் கேட்டதுவே. அரவானும் தம்பியரும் நன்றாகச் சொன்னதுவே. இப்பவல்லோ பாண்டவர்கள் இந்த வெற்றி பார்க்கவேணும். அருமைக் கலியாணம் யார் பார்க்கப் போகிறார்கள். ஐவரையும் தான் நினைந்து அடவாக நின்றார்கள். வனம் போன பாண்டவர்கள் வைணகைக் கரையோரம் அல்லிக்கிழங்கு வெட்டி அடவாகக் கொண்டு வந்து வேகவைத்துத் தின்று வெளிப்பட்டு நிற்கையிலே.

வண்ணான் துறையும் வகையான தொம்பையிலே அய்விரலிச் செடியிலே ஐவரும் போய் படுத்தார். வலதுதோள் துடித்திடுமாம். வகையான பஞ்சவற்கு அப்போது தருமரும் அடவாக எழுந்திருந்தார். அய்விரலிச்செடியிலே பல்லி அலைக்கொட்டிச்

சொன்னதுவே. அந்தச் சகுனத்தை தம்பி ஆண்டு மிகப் பாரும் என்றார். நல்லதென்று சொல்லி நல்ல சகாதேவன், அப்போது சகாதேவன் ஆண்டு மிகப் பார்த்தான்.

ஆண்டவனே அண்ணாவே அடியேன் நான் சொல்லுகிறேன். துரியோதனன் பாவி திரவியத்தைத் தான் கொடுத்து மாயன்மகள் சுந்தரியை மாலையிட்டுத் தாரோம் என்று லக்குண குமாரனுக்கு நாள் குறித்து வந்தாப்போல் ஆடியின் பிறகே அவன் யானை படை சேனை எல்லாம் துரியோதனன் படையும் தென்னவர்கள் தன் படையும் சேனைபடை உள்ளதெல்லாம் சேரவே கூட்டமிட்டு துவாரகாபுரியிலே கோபமாய்க் காண்கிறது. அந்த நல்ல சேதி அடவாகத் தான் கேட்டு அரவான் கடோற்கசன் நல்லதொரு வாள்வீமன்.

தொந்திசெட்டி கூடத் தொடர்ந்து மிகப் போய் நாலுபேருங் கூடி நலமாக வளைந்துக்கொண்டு யானைபடை சேனை எல்லாம் அடங்கலுந்தான் துரத்தி கை உடைந்து கால் உடைந்து கனத்த படை முறிந்து குதிரைபடை சேனை எல்லாம் குலவையிட்டு கொக்கறித்து வெட்டித் துரத்தி வெற்றி கண்டார் அம்மானை. கண்டு பயந்து காட்டிலே ஓடி வந்தார். அடியின் பிறகே அடவாகத் தான் தொடர்ந்து அளிஞ்சில் புதையெல்லாம அடவாகத்தான் தொடர்ந்து ஓணான் புதையெல்லாம்

ஒருகோடி மனுத்தான் பிடித்து கூடாரம் போட்டாப்போல் கோடி பால் நட்டாப்போல்.

குளத்தங்கரையோரம் கோடி யானை விட்டாப்போல் கலியாணம் என்று வந்தோம். கனமோசம் வந்ததய்யா என்று ஒளிந்தார்கள். இருந்த படை மன்னர் எல்லாம் ஓணான் புதையெல்லாம் ஓடியே தான் பிடித்து துரியோதனனும் அவன் தம்பிமார் அத்தனையும் ஓணான் கொடிபிடுங்கி ஒன்பது தாம்பு கட்டி படைத்தலைவர் மன்னவரை பதினைந்து தாம்பு கட்டி அரசு மக்கள் ராசாவை ஐம்பது தாம்பு கட்டி முன்னாகத் தள்ளி வீசினான் ஆத்தோடே.

துவாரகாபுரிக்கு துருசாகக் கூட்டி வந்தான். கலியாணப் பந்தலிலே காலோடே கட்டி வைத்து லக்குணனைக் கூட்டி வந்து நடுச்சபையிலே நிறுத்தி நல்லதொரு நாவிதனை நலமாகத்தான் அழைத்து சிறுநீறு தலையில் விட்டு தென்னவர்கள் பார்த்திருக்க அஞ்சு குடுமி வைத்து அடவாக முளையிட்டு அத்திமுளை கொர்ணடு அஞ்சு முலை படித்து சாணி உருட்டி தலைமேலே விளக்கு வைத்து.

தோளுக்கு இரண்டு விளக்கு கோடாக வைத்தார்கள். கைக்கு இரண்டு தீவட்டி கடுக்க கொடுத்தார்கள். வண்ணான் சிறு குதிரை வகையாகக்

கொண்டு வந்து ஆட்டுத்தோல் கல்லணையாய் அடவாகத் தான்போட்டு ஓணான் கொடியை உசந்ததோரு அங்குவடி பழைய முறம் ஆலவட்டம் பாங்காக மேல்போட்டு வெண்சாமரம் என்று விளக்குமார் கைக்கொடுத்து நாய்ப்பீ ஆலாத்தி நாரைக்கிழவி சுற்றி விட்டார்கள்.

எருக்கம் பூமாலை இதமாகப் போட்டார்கள். மாயன் மறைந்து மாயமாய்ப் போனதுவே. மாயனைத் தேடி அரவான் மலைகள் செடிகள் எல்லாம் காணாமல் தேடி கரையோரம் வருகையிலே மாயன்பெருமாள் மண்ணுக்கு கீழே மறைந்தார். நாராயணன் சுள்ளி என்று நன்றாய் முளைத்திருந்தார். அந்தச் சுள்ளியைக் கண்டு சுத்தி வந்து தெண்டனிட்டு மச்சமென்று வடிவெடுத்து வகையாகவே விழுந்தார்.

அரவான் முதலையைப் போல் வடிவெடுத்து மூர்க்கமாய் விழுந்தானாம். ஆமையாய் வடிவெடுத்தார். ஆனதொரு மாவனும் குறவனென்று அறவான் குத்தினான். குத்துக்கோலில் நாரையென்று ஒரு பிறவி நன்றாய்ப் பறந்துவிட்டார். ராசாளியாக அரவானும் தான் தொடர்ந்தான். எலியென்று பிறந்து இறங்கினான் பூமியிலே பூனையாய் வடிவெடுத்து பிடரியைப் பிடித்தானாம். மெச்சினேன் மருமகனே விட்டுவிடு சொல்லுகிறேன்.

அப்போது அரவான் அடி பணிந்து தெண்டனிட்டு தெண்டனிட்ட அரவானைத் திக்கென்று தானெடுத்து கம்பளிக் கயறெடுத்து கட்டினான் மாயவரை சங்குதுவாரகாபுரிக்கு தள்ளியே வந்தபின்பு கலியாண வாசலுக்கு ஒரு கர்த்தாவைக் காணேனே. இந்த அருமைப் பார்க்க எங்கள் அய்யாவைக் காணேனே. அரவான் கடோற்கசனும் நல்லதொரு வாள்வீமன் நினைந்து புலம்பி நிலவரமாய் நின்றது உண்டு.

அது கொண்டு பல்லி அலைக் கொட்டி சொல்லுது அண்ணா. அந்த மொழிக்கேட்டு ஆனதொரு தன் மருந்தான் அருச்சுனன் துரோபதையை அடவாகப் பயணம் பண்ணி தம்பியைத் தான் அழைத்து தருமரும் சொன்னாராம். கலியாண வாசலிலே கலக்கம் வாராதபடி துரியோதனன் படையும் தென்னவர்கள் உள்ளதெல்லாம் ஒரு தழுவும் வாராதபடி தயவாகவே பொறுத்து தம்பி கலியாணம் தாழ்வு வராதபடி.

கலியாண வாசலுக்கு கடுகவே போய்த் திரும்பு தம்பி அருச்சுனனே தாடாளர் போய்த்திரும்பு விடை வாங்கிக்கொண்டு வெளிப்பட்டுப் போனார்கள். அந்த வனங்கடந்து அயிராவதம் கடந்து அருச்சுனனும் அப்போ ஆனா சந்நியாசி வேஷம் கொண்டு. பாஞ்சாலி துராபதையாள் பக்கமே ஆண்டிச்சியாள் பொன்

பாதக்குறடு பொன்பிரம்பு கைபிடித்து சடையும் முடியும் தான் காதில் குண்டலமும் பாகல்பழம் போலே பழுத்த கிழவனைப் போல கலியாணப் பந்தலிலே கடுகவே வந்து நின்றான்.

மாயனைக் கண்டு வகையாகத் தெண்டனிட்டான். தெண்டனிட்ட சன்னாசி சீமானாய் நீ இருப்பாய் ரயன பாஷையிலே நலமாகப் பேசினார்காள். துரியோதனனுடைய திரவியத்தைக் கொள்ளையிட்டு யானைப்படை சேனையெல்லாம் அரைவாசி தோற்றான் காண். பெண்ணுக்கு ஆகப் பிரியமுடன் சிக்கிவிட்டான். பதினெட்டு நாளைப் படைப்போருக்கு இரை வேணுமென்று.

எந்தவகையிலும் சன்னாசி இதமாகத் தட்டவேணும். கலியாண வாசலுக்கு நீ வந்ததே போதும் இப்போ. நயன பாஷையிலே நன்றாகச் சொன்ன பின்பு பொன்னாலே நாற்காலி பிரியமுடன் போட்டு அரவான் கடோற்கசனும் நல்லநதொரு வாள்வீமன் மூவரும் வந்து முக்காலும் தெண்டனிட்டார். தெண்டனிட்ட பாலகரைத் திக்கென்று தான் எடுத்து பின்னே பதம் பெறுவாய் பெருமாள் துணையும் உண்டு.

வாழ்த்தி விடை கொடுத்தான். வால சன்னாசி அப்போ மாயன் பெருமாளும் வகையான சன்னாசி.

சன்னாசி பேச்சைத் தட்டாதே கேளும் இப்போ. தாரு புகழுடைய தருமருட ராச்சியத்தில் உங்கள் தகப்பமார் கிட்ட தனித்து மிக வாழ்ந்தார். உங்கள் த்கப்பமார் ஐவரும் சன்னாசி பேச்சைத் தட்டார். அப்படிப் போலே அடவாகக் கேளும் இப்போ.

நல்லதென்று சொல்லி நடந்தான் அரவானும் கலியாண பந்தலிலே கடுகவே வந்து வநின்று மணவரைப் பந்தலிலே கடுகவே வந்து நின்று மணவரைப் பந்தலிலே மாணிக்கர் தானெழுதி முத்துச்சரங்கள் முன்னாகத் தொங்கவிட்டு பவளச் சரங்கள் பக்கமே தொங்கவிட்டு தென்னைமரம் எழுதி சிங்காரத் தோப்பு எழுதி, வாழை தனை எழுதி வாங்கு முகு தானெழுதி சோலை எழுதி தூங்குமஞ்சம் தான் எழுதி.

அன்னம் எழுதி அதன்மேலே கிளி எழுதி வர்ணம் எழுதி மாலைகள் தொங்கவிட்டு வைர விலை வலம்புரிச் சங்குத்தேரின் மேல் ஏறி தேன்மொழியாள் வாள்வீமன் ஆலவட்டம் சூழ்ந்து வர அதிவீரர் முன்னடக்க சாம்பிராணி வீச தளம் எல்லாம் முன்னடக்க முத்துக்குடைகள் எல்லாம் முன்னாகச் சூழ்ந்து வரப் பவளக்குடை மன்னர் பக்கமே சூழ்ந்து வர.

சந்திரகாவியால் தனித்தனியே தான்பிடிக்க அனுமந்தபாலும் ஆனதொரு கைத்தாளம் ஆகாச வானம்

ஆனதொரு பூ பாணம் பத்துமுகம் தீவட்டி பக்கமே தான் பிடிக்க நீலவிருகபாணம் நிலப்பொடி தான் அதிர பூவானம் பொன்வானம் பூமியெல்லாம் தான் நடுங்க சங்கீதவானம் காமண்டலம் முழங்க பூச்சந்திரக் கடைப்பிடிக்க பூலோகம் தானதிர.

வாளாலபி மன்னன் வகையான சுந்தரியும் இருவர் இரண்டு பேரும் இனிக்கோடாய் வருகையிலே முத்தாலே ஆலத்தி முன்னாக சுத்தி நிற்பர். பவளத்தால் ஆலத்தி பாங்காகச் சுத்தி வரும் ஆலாத்தி சுத்தி அலங்கரித்து நிற்பாராம். தென்னத்தெருக் கடந்து தெருவீதி தான் கடந்து வீதி சுத்திவந்து வாள்வீமன் தான் இறங்கி தேரை விட்டுத் தானிறங்கி தேன்மொழியும் சுந்தரியாள் மாப்பிள்ளையும் பெண்ணும் மணவரையில் தான் இருந்து வெள்ளி விளக்கு எரிய வேந்தர்கள் எழுந்து நிற்க.

பார்ப்பார் புதோகிதரும் பக்கமே சூழ்ந்து நிற்க மாயன் பெருமாளும் வகையாகக் கிட்டவந்து ஆண்டிச்சி சன்னாசி அடவாகப் பார்த்து நிற்க. கலியாணப் பந்தலிலே கடோற்கசனும் ஓடிவந்து துரியோதனனையும் அவன் தம்பிமார் அத்தனையும் கலியாண வாசலிலே களப்பெலி கொடுக்கவே என்றான். அப்போது சன்னாசி அடவாக ஓடிவந்து கடோற்கசன் கைப்பிடித்து கண்ணாளா பாலகனே கலியாண வாசலிலே கலக்கமும் ஆகாது. கலியாண வாசலிலே கட்டவும் ஆகாது.

கட்டை அவிழ்த்துவிடும் கடோற்கசனே தம்பியரே. அப்போது கடோற்கசனும் அடவாகச் சொன்னதுவே. எங்கள் தாயார் துரோபதையைத் தள்ளி துகில் உரித்தான். ஒருத்தன் மயிர் பிடிக்க ஒன்பதுபேர் துகில் உரிந்தான். இவனைக் கலியாண வாசலிலே கடுகவே வெட்டவேணும். வெட்டாதடா தம்பி வெட்டவும் ஆகாது. அரவான் எழுந்திருந்து நன்றாக ஓடிவந்து அப்பவே சன்னாசி அடவாக கைப்பிடித்தான். வேண்டாமடா தம்பி வெட்டவும் ஆகாது. நல்லதய்யா சன்னாசி இவன் அவகேடு கேட்டாயோ.

வனம்போன பாண்டவர்கள் வனத்திலே இருந்தார்கள். இவனைச் சக்கரர் பின்னெடுத்து தான் போகும் அப்போது ஐவரும் கண்டு அடவாய் மீட்டுவந்தார். தேவேந்திரன் மகனார் சித்திரசேனன் வந்து தேர்க்காலில் கூட்டி தெய்வலோகம் போனகயிலே எங்கள் தகப்பமார் கண்டுத் தயவாகத் தான் மீட்டு தேத்திச் சிறகடித்து தேர் மேலே பாய்ந்து வந்து துரியோதனனைச் சேர்த்து மிகக் கொண்டு வந்தார்.

அப்போது தருமர் அடவாகத் தான் பார்த்து தம்பி அருச்சுனனே தமையனைக் கூட்டிவிட்டு நல்லது என்று சொல்லி நடந்தார்கள். இருவரும் அந்தவனம் கடந்து அயிராவதம் கடந்து மூங்கில் வனங்கடந்து

முன்னூற்றுக்காதவழி சிள்ளென்னும் காடும் செடியும் வணாந்திரமும் குருச்சேத்திரப் பூமியிலே கூட்டிப்போய் விட்டாராம். அப்போது பார்த்து ஆன துரியோதனனும் காடு மிதித்தக் காலாலே என் நாட்டை மிதியாதே.

அப்படிச்சொன்னான் ஆனதொரு பாவி இவன் இப்படி சொன்னவனை இரணகளமாக்க வேணும். அப்பாமகனே ஆனதொரு அரவானே நல்ல கலியாணத்தில் ரத்தக் குறியாகாது. அப்போ கடோற்கசனும் அடவாக ஏது சொன்னான். பன்னிரண்டு வருஷம் பாராவனம் ஒட்டிவித்து ராச்சியத்தை ஆண்டவனும் தான் இருக்க. அரக்கு மாளிகையில் அக்கினியை வைத்தவன்பா. நஞ்சைச்கலந்து நஞ்சுநீர் வைத்தவண்பா. இரும்பு ஊசி செப்பு ஊசி இவன் தானும் நட்டவண்டா.

சதிகாரன் தன்னை தான் அடிக்க வேணும் இப்போ. இவன் பண்ணின கேடு பாவம் தொலையாது. காசிக்குப் போனாலும் கருமம் தொலையாது. இவன் பண்ணின பாவம் பார்க்க முடியாது. இந்த சமயத்தில் இரு துண்டம் ஆக்க வேணும். நாலு தலைவாசலுக்கு நாலுதலை கட்டவேணும் என்று சொல்லி பல் கடித்து இருக்கிற வேளையிலே சன்னாசி வந்து தம்பியரைத்தான் அழைத்து முகூர்த்த வேளை போகிறது. மூர்க்கமுள்ள தம்பியரே. பொறுத்தார். அகண்டார். பொங்கினார். காடுறைந்தார்.

பொறுமை பொறுத்தவர்கள் புண்ணியராய்த் தான் இருப்பார். பஞ்சவர்கள் குணமும் பாங்காகத் தானும் உண்டு. இவர்கள் பண்ணின பாவம் பஞ்சவர்கள் வந்தாலே யாரது அப்போது ஆனதொரு தம்பியரே. சொன்னபடி கேளும் துரைமகனே ராசாவே. கோபத்தை நீ அடக்கிக் குளுமையாய்க் கேளுமையா. அப்போது அரவானும் அடவாக் கிட்டவந்து சன்னாசி ஐயா எங்கள் தகப்பன் போல் சொன்னீரே. கலியாணப் பந்தலிலே கட்டை அவிழ்த்துவிட்டான். துரியோதனனும் தென்னவனும் ஏது சொல்வான்.

பெண்ணடிமை அத்தனையும் தான் அடிமை
பிள்ளையெல்லாம் பேர் இட்டுத் தாரமய்யா
நாள் உள்ளமட்டும் உம்மை மறப்பதில்லை

என்று சொல்லித்தானும் எல்லோரும் போனார்கள். துரியோதனனும் திரும்பி மிக ஓடிவந்து லக்கணனை விடச் சொல்லி நலமாகக் கேட்பானாம். நாகவல்லி முடியும் மட்டும் நானும் விடுவதில்லை. கலியாணம் காரிகைக்குக் கலியாணம் அரசாணிப் பந்தலிலே எல்லோரும் சூழ்ந்து நிற்கு வாளாலபி மன்னனுக்கும் மாயன் மகள் சுந்தரிக்கும்.

கலியாண முகூர்த்தம் கடுக முடியுது இப்போ. சோபன கலியாணம் சுந்தரிக்கு முடியுது இப்போ..... வலமாக அரசாணி முன்னாக அரசாணிக் காலிலே

லக்கணனைக் கட்டிவைத்து வலது கால் தன்னிலே வாள்வீமன் தான் உதைத்தான். மணவரைச் சுத்தி வந்து மாங்கிலியம் தான் வாழ்த்தி மாங்கிலியம் தான் தரித்தாள் மாயன்மகள் சுந்தரிக்கு.

அரிசிபருப்பு அடவாகத்தான் எடுத்து
புரோகிதருக்குப் பணங்காசு
பூதானம் தான் கொடுத்து
.. ம தம்பியர்க்கு கடுக முடித்தார்கள்
...... னி அறிய முடித்தார்கள்
...... ஒருத்திவந்து அடவாகப் போய் இருந்து
...... பொன்மாலை போத அலங்கரித்து

மாயனுட காலிலே வகையாகத் தெண்டனிட்டார். சன்னாசி காலில் தயவாக தெண்டனிட்டார். எல்லோரும் காலில் இயல்பாக தெண்டனிட்டார். இன்னும் பதம் பெறுவாய் இளையபதம் உண்டாவீர். பின்னைப்பதம் பெறுவாய் பெருமாள் துணையும் உண்டு.

சன்னாகி காலிலே தயவாக தெண்டனிட்டு

......மும் போட்டு பிரியமுடன் கொண்டு வந்து ...... கைதான் கொடுத்து கடுக அனுப்பி வைத்தார்.

சன்னாசி போகையிலே மாப்பிள்ளையைத் தான் அழைத்து அரவான் கடோற்கசனை நலமாகத்தான்

அழைத்து அண்ணனும் தம்பியரும் அடவாக வாழ்ந்து இருங்கோ. வடபத்திரகாளி வருவாள் துணையும் உண்டு. போடாமகனே புத்தியுள்ள பாலகனே. லக்கணனைக் கட்டவிழ்த்து நன்றாக விட்டுவிட்டு நல்லதென்று நடந்தானே அரவானும்.

*முற்றும்*